இலவச பிரதி
Registered as a NewsPaper

விலை ரூபா : 10.00

# ஈழநாதம்
மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-12


தைப்பொங்கல் வரை 15% வீதம்
விசேட சேவைக் கழிவுடன்
உங்கள் அனைத்துத் தேவைகளுக்கும்
R.V.பந்தல் சேவை
முல்லைச்சாலை, தருமபுரம். T.P:0712-610008 (சி-13511) விநாயகர் வீதி, மயிலிட்டி.

நாதம் 16 | திருவள்ளுவர் ஆண்டு 2036 | கார்த்திகை–23 | 08–12–2005 | வியாழக்கிழமை | ஓசை–294

## அனுசரணைப் பணியைத் தொடர நோர்வேக்கு மகிந்த உத்தியோகபூர்வமாக அழைப்பு!

### -உதவி வழங்கும் நாடுகளுடனும் பேச்சு

இலங்கை அமைதி முயற்சிகளில் அனுசரணையாளராக செயற்படுமாறு நோர்வே நாட்டுக்கு சிறிலங்கா அரசாங்கம் நேற்று உத்தியோகபூர்வமாக அழைப்பு விடுத்துள்ளது. இதற்கான அழைப்பை மகிந்தராஜ பக்ஷ நேற்று இலங்கைக்கான நோர்வேத்தூதுவருடாக விடுத்துள்ளார்.

சிறிலங்கா அரசாங்கம் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும்தெரிவித்துள்ளதாவது;

இலங்கைக்கு உதவி வழங்கும் இணைத் தலைமை நாடுகளான அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம், ஜப்பான், நோர்வே நாட்டினது

(12 ஆம் பக்கம் பார்க்க)

## அனுசரணையாளர் பணி ஏற்கும்முன் பல விடயங்களில் முடிவுக்கு வரவேண்டும்!

### - நோர்வே அபிவிருத்தி அமைச்சர் எரிக்சூல்ஹெய்ம்

இலங்கை அமைதிப் பேச்சுவார்த்தையில் மீண்டும் அனுசரணையாளராகப் பணியாற்றுவதானால் போர்நிறுத்தப் புரிந்துணர்வு ஒப்பந்தம் தொடர்பாக பல விடயங்கள் விவாதிக்கப்பட வேண்டும். அத்துடன் கண்காணிப்புக்குழு மற்றும் நோர்வே நாடு மற்றும் விடுதலைப்புலிகளுக்கும் சிறிலங்கா அரசிற்கும் இடையே உள்ள உறவுகள் பற்றி விவாதித்து முதலில் ஒரு ஒப்பந்தத்திற்கு வரவேண்டும்.அத்துடன் இந்த விவகாரம் தொடர்பாக நோர்வே இறுதி முடிவெடுப்பதற்கு முன் சம்பந்தப்பட்டவர்களுடன் விவாதித்த பிறகே முடிவிற்கு வருவோம் என இலங்கைக்கான நோர்வேயின் சிறப்புத் தூதுவராகப்பணியாற்றியவரும் அமைச்சருமான எரிக்சூல்ஹெய்ம் கூறியுள்ளார்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

### – சிறிலங்கா படையினரின் ஆக்கிரமிப்புக்கெதிராக –

# யாழ்.இல் மாணவர் போராட்டம் வலுவடைகிறது கல்விச்செயற்பாடுகள் அனைத்தும் முடக்கம்

## பொது அமைப்புக்களும் பங்கேற்க முடிவு

(யாழ்ப்பாணம்)

**வடமராட்சிப் பாடசாலை மாணவர்களின் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து நேற்று மூன்றாவது நாளாக வடமராட்சி பாடசாலைகளுடன் இணைந்து வலிகாமம், தென்மராட்சி, தீவகம், யாழ்ப்பாணம் ஆகிய கல்விக் கோட்டப் பாடசாலைகளின் மாணவர்களும் பாடசாலைப் பகிஷ்கரிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர். இப்போராட்டத்தில் பொதுஅமைப்புகளும் இணைந்துகொள்வதென முடிவெடுத்துள்ளன.**

வடமராட்சியில் உள்ள பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி மைதானம், கல்லூரி வளாகம் என்பவற்றை ஊடறுத்து இராணுவத்தினர் காவலரணைக் கட்டுவதற்கு எதிராக ஹாட்லிக் கல்லூரி மாணவர்கள் ஆரம்பித்த போராட்டம் இரண்டாம் நாளான நேற்றுமுன்தினம் வடமராட்சிப் பாடசாலைகளுக்குப் பரவி நேற்று மூன்றாம் நாள் யாழ். குடாநாட்டுப் பாடசாலைகளுக்கும் பரவியுள்ளது.

இதே நேரம் பாடசாலை மாணவர்கள் மீது கண்ணீர் புகைக்குண்டுகள் மற்றும் துப்பாக்கிப் பிரயோகங்கள் வடமராட்சிப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட மிலேச்சத்தனமான செயற்பாடுகளுக்கு எதிராக பொதுஅமைப்

(12 ஆம் பக்கம் பார்க்க)


(கா)

## இராணுவ ஆக்கிரமிப்பை அகற்ற இன்று காலைவரை காலக்கெடு

### -படைத்தரப்புக்கு மாணவர் சமூகம் அறிவிப்பு

வடமராட்சி பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள பாரிய மண் அணை,முட்கம்பி வேலிகள், காவலரண்களை அகற்ற இன்று காலை6.00 மணி வரை சிறிலங்காப் படைத்தரப்புக்கு மாணவர்கள் காலக்கெடு விடுத்துள்ளனர். இதற்கு செவிசாய்க்காது போனால் போராட்டத்தை மேலும்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## மாணவர்கள் மீது படையினர் தாக்குதல்; ஆட்சேபித்த மாணவர்கள் மீது துப்பாக்கிச்சூடு

### - யாழ்.இந்து மகளிர் கல்லூரிச் சந்தியில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

யாழ். இந்து மகளிர் கல்லூரிச் சந்தியில்வைத்து பாடசாலைக்குச் சென்ற மாணவர்கள் இராணுவத்தினரால் தாக்கப்பட்டார்கள். நேற்றுக் காலை 8.30 மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றது. இதனைத் தொடர்ந்து அந்த இடத்தில் கூடிய மாணவர்கள் இராணுவத்தினருக்கு எதிரான கோசங்களை முன்வைத்தார்கள். இதனால் ஆத்திரமுற்ற இராணுவத்தினர் மாணவர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டபோது அந்த இடத்தில் இருந்து மாணவர்கள் சிதறியோடினார்கள்.

குறிப்பிட்ட இடத்தில் வைத்து மூன்று மாணவர்களைக் கைது செய்த இராணுவத்தினர் இவர்களை அருகில் உள்ள முகாமிற்கு கொண்டு சென்றார்கள். அங்கு கடுமையாகத் தாக்கப்பட்டு இரு மாணவர்கள் விடுவிக்கப்பட்டபோதிலும், யாழ். கனகரத்தினம் மகாவித்தியாலய மாணவன் விடுவிக்கப்படவில்லை என யாழ். மாவட்ட தமிழ் மாணவர்கள் ஒன்றியம் தெரிவித்தது.

இந்து மகளிர் கல்லூரியில் க.பொ.த சாதாரண தரப்பரீட்சைக்குத்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவ அடக்குமுறைகளோடு மாணவரை சீண்டினால் பாரதூரமான விளைவுகளைச் சந்திக்க நேரும்

### -யாழ். தமிழ் மாணவர் ஒன்றியம் எச்சரிக்கை!

"பாடசாலையைச் சூழ அமைந்திருக்கும், அண்மித்திருக்கும் இராணுவ முகாம்கள், காவலரண்கள் என்பனவற்றை அகற்றுவதோடு அச்சுறுத்தல் எவையுமற்ற சுதந்திரமான கற்றலுக்கு இராணுவம் வழிவிடல் வேண்டும்"என்ற கோரிக்கையோடு தமிழ் மாணவர் ஒன்றியத்தினால் செவ்வாய் முதல் ஆரம்பிக்கப்பட்ட மாணவர்களின்பகிஷ்கரிப்புப்போராட்டம் யாழ்ப்பாண குடாநாடு எங்கும் விஸ்தரிக்கப்பட்டுள்ள நிலையில் தங்கள் கற்றல் செயற்பாடுகளை புறக்கணித்து

(12 ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியாவில் குண்டுவெடிப்பு பொதுமகன் பலி; ஐவர் காயம்

(வவுனியா)

வவுனியா பேருந்து நிலையத்திற்கு அருகில் நேற்று மாலை 3.45 மணியளவில் இடம்பெற்ற கைக்குண்டு வெடிப்புச் சம்பவத்தில் பொதுமகன் ஒருவர் கொல்லப்பட்டுள்ளார். ஒரு சிப்பாய் உட்பட ஐந்து பேர் காயமடைந்துள்ளனர். வவுனியா பேருந்து நிலையத்திற்கு அருகில் உள்ள கடைத்தெருப்பக்கமாக இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

கொல்லப்பட்டவர் மாங்குளம் ஒலுமடுவைச் சேர்ந்த சுப்பிரமணியம் யோகபுத்திரன் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

காயமடைந்தவர்களான பாஸ்கரன்-கமலேஸ்வரி(வயது-36),மகேஸ்வரன் கமலரூபன்( வயது-21),தம்பிராஜா சந்திரபோஸ் (வயது-30),

(12 ஆம் பக்கம் பார்க்க)

## படைச்சிப்பாய் மரணம்

யாழ்ப்பாணம் இருபாலையில் நேற்று முன்தினம் மேற்கொள்ளப்பட்ட கிளைமோர் குண்டுத் தாக்குதலில் படுகாயமடைந்த இராணுவச் சிப்பாய் நேற்று அதிகாலை உயிரிழந்துள்ளார்.

அதிகாலை 12.45 மணி அளவில் இந்த இராணுவச் சிப்பாய் உயிரிழந்துள்ளதாகக் கொழும்பு

(12 ஆம் பக்கம் பார்க்க)

## அமைதிப் பேச்சுக்கு தலைமை ஏற்க ஜீ.எல்.பீரிஸுக்கு மகிந்த அழைப்பு

சிறிலங்கா அரசியலில் புதியதிருப்பமாக சனாதிபதி மகிந்தராஜபக்ஷவை ஐக்கியதேசியக் கட்சியின் மூத்ததலைவரான ஜி.எல்.பீரிஸ் சந்தித்துப் பேசியுள்ளார். அலரிமாளியையில் நடைபெற்ற இச்சந்திப்பின்போது முடங்கிக் கிடக்கும் அமைதிப்பேச்சுகளை அரசாங்கத்தின் சார்பில் முன்னெடுக்குமாறு மகிந்த விடுத்த வேண்டுகோளை ஜீ.எல்.பீரிஸ் ஏற்றுக்கொண்டார்.முன்னைய அமைதிப்பேச்சுகளில் தீவிரபங்காற்றியவர் ஜீ.எல்.பீரிஸ்.மகிந்தவின் அழைப்பை தாம் ஒப்புக்கொண்டது குறித்தும்,மகிந்தவுடனான பேச்சுக்கள் குறித்தும் ஐக்கியதேசியக்கட்சித்தலைவர் ரணில்விக்கிரமசிங்க, பிரதித்தலைவர் கருஜெயசூர்ய ஆகியோரிடம் ஜீ.எல்.பிரீஸ் விளக்கமளித்துள்ளார்.

வரிவிளம்பரம்

**கேம்பிறிச் கல்லூரி**

விசேட O/L மாணவர்களிற்கான விஞ்ஞான கருத்தரங்கும் இறுதிப்பரீட்சைக்கு ஏற்ற வினா விடைப் புத்தகமும் வழங்கப்படும். காலம் 9மணி - 4மணி 09.12.2005 வெள்ளிக்கிழமை நடைபெறும். கட்டணம் 100/= பௌதிகவியல் ஆசிரியர் சு.தவபாலன்

(7076)

**புதிய பிரிவுகள் ஆரம்பம்**

இலங்கை கணனிகள் சங்கத்தினால் நடாத்தப்படும் பரீட்சை

Srilankan Computer Driving Liecence

**வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன.**

**தொடர்புகட்கு:**

**வின்நெற் கணனி பயிற்சி நிலையம் டிப்போ வீதி, கிளிநொச்சி**

(சி.13074)

# கரைச்சிப்பிரதேச செயலக உப பணிமனையில் காணி விசாரணைக் கூட்டம்

(வட்டக்கச்சி)

வட்டக்கச்சி இராமநாதபுரம் கரைச்சிப்பிரதேச செயலக உபணிமனையில் காணி சம்பந்தமான விசாரணைக் கூட்டம் எதிர்வரும் பதின்மூன்றாம் திகதி நடைபெறவுள்ளது. கிளிநொச்சி கிழக்குப் பகுதியில் உள்ள வட்டக்கச்சி சிவிக்சென்ரர், மாவடி, மாயவனூர்,இராமநாதபுரம் ஆகிய பகுதிகளில் அரச காணிகளில் குடியிருப்போருக்கான அனுமதிப் பத்திரம் வழங்கலும், அனுமதிப் பத்திரம் இல்லாதவர்களுக்கான புதுப்பதிவுகளும் இடம்பெறவுள்ளன.

அத்தோடு காணிகள் சம்பந்தமான பதிவினை மேற்கொண்டு அனுமதிப் பத்திரத்தைப் பெறாதவர்களுக்கும் பத்திரங்கள் வழங்கப்படவுள்ளன. மற்றும் காணி சம்பந்தமான பிரச்சினைகள் இனங்காணப்பட்டு அதற்கான நடவடிக்கைகளும் எடுக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்றைய இப் பத்திரிகைச் செய்தியில் மேற்படிகூட்டம் எதிர்வரும் பதின்மூன்றாம் திகதி நடைபெறவுள்ளது என்பதற்குப் பதிலாக மூன்றாம் திகதியென தவறுதலாக பிரசுரமாகியிருந்தது.

(12)

# துவிச்சக்கர வண்டிகளுக்கான உரிமத்தகடுகள் வழங்கல்

(அலுவலக செய்தியாளர்)

துவிச்சக்கரவண்டிகளுக்கான 2006ஆம் ஆண்டிற்குரிய உரிமத்தகடுகள் கரைச்சி பிரதேச சபையினரால் வழங்கப்பட்டுவருகின்றது. இதன்முதற்கட்டம் நேற்று நடமாடும் சேவையாக ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் துவிச்சக்கரவண்டி பாவனையாளர்கள் பலர் உரிமத்தகடுகளைப் பெற்றுகொள்வதை காணமுடிந்தது.

அத்துடன் 2006ஆம் ஆண்டு முதலாம் மாதம், முதலாம்திகதி தொடக்கம் உரிமத்தகடுகள் பொருத்தப்படாத துவிச்சக்கரவண்டிகளுக்கு குற்றப் பணம் அறவிப்படும் எனவும் கரைச்சிப்பிரதேச சபையினர் தெரிவித்துள்ளனர்.

(கு,தீ)

# தமிழர்புனர்வாழ்வுக் கழகத்தின் ஏற்பாட்டில் தையல் பயிற்சி நிறைவு விழா

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் 20ஆம் ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் நிதியுதவியுடன் உழைக்கும் மகளிர் அபிவிருத்தி நிறுவனம் நடாத்தும் தையல் பயிற்சி, பொருட் கண்காட்சியும் தையல் இயந்திரம் மற்றும் சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் இடம்பெற்றன.

இந்நிகழ்வு செம்பியன்பற்று வடமராட்சி கிழக்குப் பகுதியில் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான மீள்குடியேற்ற பொதுநோக்கு மண்டபத்தில் நேற்றுக்காலை11.30 மணிக்கு ஆரம்பமானது. மங்கல விளக்கினை கைத்தொழில் அபிவிருத்தி உத்தியோகத்தர், சிவநாதன், வடமராட்சி கிழக்கு காவல் துறைப்பொறுப்பாளர் ச.சசிநாதன் ஊரக மேம்பாட்டுதுறைப் பொறுப்பாளர் ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

தேசியக்கொடியினைபோராளி தமிழரசன் ஏற்றிவைத்தார். தொடர்ந்து தமிழர் புனர் வாழ்வுக் கொடியினை வடமராட்சி கிழக்கு சுனாமி வேலைத் திட்ட இணைப்பாளர் மோ. யூட் ஏற்றி வைக்க, உழைக்கும் மகளிர் அபி விருத்தி நிறுவனக் கொடியினை நிறுவன இணைப்பாளர் தேவிகா ஏற்றிவைத்ததையடுத்து அகவணக்கத்துடன் நிகழ்வு ஆரம்ப மாகியது.

வரவேற்புரையை தையல் பயிற்சி ஆசிரியர் சு. தர்சினி வழங்க, பிரதம விருந்தினர் உரையை, மருதங்கேணி பிரதேச செயலாளர் ஜெயசீலன் வழங்கினார்.தொடர்ந்து சிறப்புரையை போராளி தமிழரசன், உழைக்கும் மகளிர் அபிவிருத்தி நிறுவன இணைப் பாளர் வடமராட்சி கிழக்கு சுனாமி வேலைத்திட்ட இணைப்பாளர் ஆகியோர் நிகழ்த்தினர்.

பயிலுனர்களின் கைத்திறன் கண்காட்சி பார்வையிடப்பட்ட தையடுத்து பயனாளிகள் 30 பேருக்கு தையல் இயந்திரம் வழங்கப்பட்டது. இதனை உழைக்கும் மகளிர் அபிவிருத்தி நிறுவனப்பணிப்பாளர் பா. திலகாவினால் வழங்கப்பட்டு சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.




இந்நிகழ்வில் போராளிகள், பொதுமக்கள், சமூக ஆர்வலர்கள் எனப் பலர் கலந்து சிறப்பித்தனர்.

(கு,தீ)

# இரத்தினபுரம் வீதிப்பாலம் நேற்று திறந்துவைப்பு

கிளி.இரத்தினபுரம் வீதியில் அமைக்கப்பட்டு வந்த பாலம் நேற்றைய தினம் திறந்துவைக்கப்பெற்றது.மழைகாலங்களில் றையாறு பெருக்கெடுத்துப் பாயும் போது திருவையாறு இரத்தினபுரம் மக்கள் பாவிக்கும் இரத்தினபுரம் வீதியின் பகுதி சுமார் ஐந்தடிக்கு மேல் நீரபரவிப் பாய்வதால் இப்பகுதி மக்கள் போக்குவரத்தில் பெரும் சிரமத்தினை எதிர்கொண்டு வந்தனர். இந்நிலையில் புனர்வாழ்வு நிவாரண புனரமைப்பு(ஆர்.ஆர்.ஆர்.ஆர்) பெய்லி பாலப்பிரிவினர் மேற்படி பகுதியில் பாலம் ஒன்றினை அமைத்திருந்தனர். எனினும்






அப்பாலத்தின் அளவு நீர் பாய்ந்து செல்லும் பரப்பிலும் குறைவாகையினால் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபரின் வேண்டு கோளுக்கமைய மேற்படி நிறுவனத்தால் இப்பாலம் 43 மீற்றராக மீண்டும் திருத்தியமைக்கப்பெற்றது. இப்பாலம் நேற்றைய தினம் காலை 10.00 மணிக்கு கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் இராசநாயகம் அவர்களால் மக்கள் பாவனைக்கு திறந்து வைக்கப்பெற்றது.

## வடக்கு கிழக்கு வீடமைப்பு மீள் நிர்மாணத்திட்டம்

**வீடமைப்பு மீள்நிர்மாணத்திட்டத்திற்கென பயன்நுகரிகள் தெரிவு செய்யப்பட்டு பிரதேச செயலர்களால் 15 நாட்களுக்கு பொதுமக்களின் பார்வைக்கு பொதுஇடங்களில் வைக்கப்படும்போது பொதுமக்கள் தமது ஆட்சேபனை களைத் தெரிவிக்கலாம். ஆட்சேபிக்கப்படுவோர் மீளாய்வுக் குட்படுத்தப்படுவர். அதன் பின்பு குறைகேள் நிவர்த்திக்கப் பட்டு பயன்நுகரிகள் முன்னுரிமைப்பட்டியல் பிரதேச செயலரால் அரசாங்க அதிபரது அனுமதிக்குச் சமர்ப்பிக்கப் படும். அனுமதிக்கப்பட்ட பயன்நுகரிகளுக்கு**

- முற்றான வீடழிவுக்கு 250,000/= ரூபாவும்
- பகுதியான சேத வீடழிவுக்கு 100000/=ரூபாவும்

**கட்டம் கட்டமாகப் பயன்நுகரிகளின் வங்கிக்கணக்கிற்கு மாவட்ட வீடமைப்பு மீள் நிர்மாண முகாமைத்துவப் பிரிவினால் அனுப்பிவைக்கப்படும்.**

**யுத்தத்தால் வீடழிந்து இத்திட்டத்தில் சேர்க்கப்படக்கூடிய நிபந்தனைகளைக் கொண்டிருந்தும் நீங்கள் பயன் நுகரியாகத் தெரிவு செய்யப்படவில்லையா?**

***என்ன செய்யலாம்? முடிவான விபரங்கள் நாளைய பத்திரிகையில்.***

(சி.13465)

## தமிழீழ மாவட்ட நீதிமன்று - கிளிநொச்சி

**வ.இல. :- 206/05,**
**தன்மை :- மணநீக்கம்**

**வழக்காளி**
**இராசகுலசிங்கம் விக்கினேஸ்வரன்**
**காந்திக்கிராமம்,**
**கோணாவில்.**

**எதிர்**
**விக்கினேஸ்வரன் சிவாசசி,**
**அம்பலப்பெருமாள்குளம்,**
**பிள்ளையார் கோவில் அருகாமை**
**அம்பலப்பெருமாள்**
**- எதிராளி -**

## பகிரங்க அறிவித்தல்

*மேற்குறித்த எதிராளிக்கு:-*

இவ் வழக்கானது வழங்காளியால் , உமக்கு எதிராக இந்நீதிமன்றில் விவாகரத்துக் கோரித் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.உமக்கான அழைப்புக் கட்டளையை முறைநிறைவேற்றுனர் மூலம் சேர்ப்பித்தும் நீர், நீதிமன்றிற்கு சமுகம் கொடுத்து, உமக்குரிய சட்டவழி நடவடிக்கைகளை மேற்கொள்ளாமல் தலைமறைவாகி இருந்து வருகின்றீர். எனவே இவ் அறிவித்தல் வெளியாகி 14 நாட்களுக்கிடையில் நீரோ அல்லது உமது நலனில் அக்கறை உடையோரோ மன்றில் தோன்றி சட்டப்படியான நடவடிக்கைகளை எடுக்குமாறும், தவறும் பட்சத்தில், இப்பகிரங்க அறிவித்தல் உமக்குச் சேர்ப்பிக்கப்பட்டதாகக் கருதி உமக்கு எதிரான ஒருமுகவிளக்கம் நடாத்தப்பட்டு, தொடர் சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதை இத்தால் உமக்கு அறியத்தரப்படுகின்றது.

"இந்த 2005ஆம் ஆண்டு, மார்கழி மாதம் ...திகதி"
"மன்றின் கட்டளைப்படி"

வரைபு:-
வழக்காளிகள் சட்டவாளர்,
**தா.இ.குலசங்கர்,**
பகலவன் போட்டோக்கொப்பி,
டிப்போச் சந்தி, இரத்தினபுரம்வீதி,
கிளிநொச்சி.

**செ.மாணிக்கராசா,**
**பதிவாளர்**
தமிழீழ மாவட்ட நீதிமன்று
கிளிநொச்சி.

(சி-13438)

# சிங்கப்பூரில் வீட்டுப் பணி செய்வோர் நரக சூழ்நிலையில் வாழ்ந்து வருகின்றனர்

-மனித உரிமை அமைப்புத் தகவல்

(சிங்கப்பூர்)

**சிங்கப்பூரில் வீட்டு வேலை செய்பவர்கள் நரக சூழ்நிலையில் வாழ்ந்து வருகின்றனர். நீண்ட நேரம் பணியாற்றுகின்றனர். குறைந்த ஊதியமே அளிக்கப்படுகின்றது. கொத்தடிமை போல் நடத்தப்படுகின்றனர் என மனித உரிமை அமைப்பு கண்டனம் தெரிவித்துள்ளது.**

அமெரிக்காவில் உள்ள நியூயோர்க்கை மையமாகக் கொண்டு மனித உரிமை கண்காணிப்பு அமைப்பு ஒன்று செயற்படுகின்றது. சிங்கப்பூரில் வீட்டு வேலை செய்பவர்கள் நிலை குறித்து அந்த அமைப்பு 128 பக்க அறிக்கை ஒன்றை சமீபத்தில் வெளியிட்டுள்ளது. அதில் வீட்டுப் பணியாட்களாகப் பணிபுரியும் 90 பேரின் பேட்டிகள், அவர்கள் கொடுமைகளை அனுபவிக்கும் சம்பவங்கள் ஆகியவை இடம்பெற்றுள்ளன. அதில் கூறியிருப்பதாவது:-

இந்தோனேசியா, பிலிப்பைன்ஸ், இலங்கை நாடுகளைச் சேர்ந்த ஒரு இலட்சத்து 50 ஆயிரம் பெண்கள் சிங்கப்பூரில் உள்ள வீடுகளில் பணியாட்களாகப் பணிபுரிகின்றனர். ஏழு வீட்டுக்கு ஒரு பணிப்பெண் என்ற ரீதியில் இவர்கள் பணி புரிகின்றனர். வீட்டில் இருக்கும் கணவன், மனைவி வேலைக்குச் சென்று விட வீட்டைப் பராமரித்து வைப்பது இந்தப் பெண்களின் பணி குடும்ப பணக் கஷ்டத்தைப் போக்கவே இவர்கள் நாடு விட்டு நாடு வந்து வீட்டு வேலை செய்கின்றனர். பிலிப்பைன்ஸ், இந்தியா, பாகிஸ்தான் ஆகிய நாடுகளில் இருந்து வெளிநாடுகளுக்குச் சென்று பணி புரிபவர்களின் மூலம் ஆண்டுதோறும் ஒன்பது இலட்சம் கோடி ரூபா சொந்த நாடுகளுக்கு அனுப்பப்படுகின்றது.

சிங்கப்பூரில் தொழிலாளர் நலச் சட்டத்தில் வீட்டுப் பணிப்பெண்கள் இடம்பெறவில்லை. அதனால் அவர்களுக்கு அங்கு சட்டப்படி பாதுகாப்பும் இல்லை. இது சர்வதேச சட்டத்தை மீறிய செயல். சிங்கப்பூரில் வீடுகளில் வேலை செய்பவர்கள் தினமும் 13 முதல் 19 மணி நேரம் பணிபுரிய வேண்டியுள்ளது. வாரவிடுமுறை கிடையாது. செக்ஸ் கொடுமை, கடுமையான வார்த்தைகளால் திட்டுவது அடித்து உதைப்பது போன்ற சம்பவங்கள் சர்வசாதாரணமாக நடக்கின்றன. வீட்டுப் பணிப் பெண்களுக்கு மத சுதந்திரம் கிடையாது. ஒப்பந்தத்துக்கு மாறாகப் பணி செய்ய வேண்டிய கட்டாயம் உள்ளது. வெளித் தொடர்புக்கு அனுமதி இல்லை. மீறிப் புகார் செய்தால் ஊதியம் இல்லாமல் நாடு கடத்தப்படுவோம் என்ற அச்ச உணர்வு அவர்களிடையே தோன்றியுள்ளது. வீட்டுப் பணிப்பெண்கள் சிங்கப்பூர் ஆண்களைத் திருமணம் செய்யக்கூடாது. கர்ப்பமாகக்கூடாது போன்ற கடுமையான கட்டுப்பாடுகளும் அங்கு உள்ளன.

## இந்தியா - தென்னாபிரிக்கா குற்றவாளிகளைப் பரிமாற இணக்கம்

(புதுடில்லி)

இந்தியாவும் - தென்னாபிரிக்காவும் தாம் தடுத்து வைத்துள்ள குற்றவாளிகளைத் தத்தமது சொந்த நாடுகளிற்கு ஒப்படைப்பது குறித்து இணக்கப்பாட்டிற்கு வந்துள்ளன.

மேலும் குற்றச்செயல்கள் தொடர்பான வழக்குகளை விசாரிக்கும் சட்டமுறைகளைப் பரிமாறிக் கொள்ளவுள்ளன.

அண்மையில் இந்தியாவிற்கு விஜயமொன்றை மேற்கொண்டிருந்த தென்னாபிரிக்கப் பிரதி வெளிவிவகார அமைச்சருக்கும், இந்திய வெளிவிவகாரத் துணையமைச்சருக்குமிடையில் நடைபெற்ற பேச்சுவார்த்தையின் போது இந்த இணக்கப்பாடு எட்டப்பட்டது.

இச்சந்திப்பின்போது இரு நாடுகளுக்குமிடையிலான பொருளாதார அறிவியல் தொழில்நுட்பம், கலாச்சார பரிமாற்றம், கல்வி உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் குறித்து ஆராயப்பட்டதாக இந்திய வெளிநாட்டு வெளிவிவகார துணையமைச்சர் தெரிவித்தார்.

இரு தரப்பு உறவுகளை வலுப்படுத்துவதற்கு இரு நாடுகளையும் சேர்ந்த அமைச்சர்களுக்கிடையில் சந்திப்புக்கள் இடம்பெறும் எனத் தெரிவிக்கப்படுகிறது.



ரஷ்யா சென்றுள்ள பிரதமர் மன்மோகன்சிங்கிற்கு மொஸ்கோ பல்கலைக்கழகம் சார்பில் கௌரவ பேராசிரியர் பட்டம் வழங் கப்பட்டது,

## ஈராக்கில் மனித வெடிகுண்டுத் தாக்குதல் 36 பேர் பலி; 72 பேர் காயம்

(பாக்தாத்)

ஈராக் நாட்டில் பொலிஸ் பயிற்சிக் கல்லூரிக்குள் இரண்டு பெண் மனித வெடிகுண்டுகள் நடத்திய தாக்குதலில் 36 பேர் பலியானார்கள். 72 பேர் காயமடைந்தனர்.

ஈராக் தலைநகர் பாக்தாத்தில் பொலிஸ் கல்லூரியில் பொலிசில் சேர்ந்துள்ள இளைஞர்களுக்கு பயிற்சி நடந்து கொண்டிருந்தபோது இரு பெண்கள் ஒரு வகுப்புக்குள் நுழைந்தனர்.

அந்த இரண்டு பெண்களும் தங்கள் உடலில் வெடிமருந்துகளைக் கட்டியிருந்தனர். அவர்கள் வகுப்புக்குள் நுழைந்ததும், குண்டுகளை வெடிக்கச் செய்தனர். இதில் அந்த இரண்டு பெண்களும் உடல் சிதறிப் பலியாகினர். பொலிஸ் அதிகாரிகளும், மாணவர்களுமான 36 பேர் பலியானார்கள். 72 பேர் காயமடைந்தனர். இந்தச் சம்பவம் நடந்தபோது அமெரிக்க இராணுவ வீரர்கள் யாரும் அங்கு இல்லாததால், அவர்கள் தரப்பில் காயமோ, உயிர்ச் சேதமோ ஏற்படவில்லை. குண்டு வெடித்த சத்தம் கேட்டதுமே, அமெரிக்க இராணுவ வீரர்கள் அந்தப் பகுதிக்கு விரைந்தனர்.

## இந்திய இளைஞரின் கண்ணைப் பறிக்க வேண்டும் சவுதி அரேபிய நீதிமன்று படு பயங்கர உத்தரவு

(டுபாய்)

சவுதி இளைஞர் ஒருவரின் கண் பார்வை பறிபோகக் காரணமான இந்திய இளைஞரின் கண்ணைப் பறிக்க வேண்டும் என்று சவுதி நீதிமன்று விநோதமான அதேநேரத்தில் படு பயங்கரமான தீர்ப்பை வழங்கியுள்ளது. கண்பார்வை பறிபோனதற்கு நஷ்ட ஈடுதருவதாகக் கூறியும் மறுத்து விட்டது.

சிறியதாக நடந்த கைகலப்பில் அதுவும் சம்பவம்நடந்து சில வாரங்கள் கழிந்து கண் பறிபோனதாக போடப்பட்ட வழக்கில் பதிலுக்குப் பதில் கண்ணைப் பறிக்க வேண்டும் என்ற விநோத தீர்ப்பு ஒன்று சவுதியில் வழங்கப்பட்டுள்ளது. இது பற்றிய விபரம் வருமாறு:-

கேரளாவைச் சேர்ந்த இளைஞர் அப்துல் லத்தீப் நவ்ஷாத் இஸ்லாமிய சட்டத்தை கடுமையாக பின்பற்றும் நாடுகளில் ஒன்றான சவுதி அரேபியாவில் உள்ள மின்கல நிறுவனத்தில் பணியாற்றி வருகிறார்.

கடந்த 2003 ஆம் ஆண்டு தான் புணிபுரியும் நிறுவனத்திற்கு வந்த சவுதி இளைஞர் ஒருவருடன் நவ்ஷாத்துக்கு தகராறு ஏற்பட்டது. இதனால் ஏற்பட்ட கைகலப்பில் சவுதி இளைஞரின் ஒரு கண்ணில் இலே சான காயம் ஏற்பட்டது. இந்தச் சண்டை நடந்த சிலவாரங்கள் கழித்து சவுதி இளைஞரின் ஒரு கண் பார்வை பறிபோனது. தனது கண் பார்வை பறிபோனதற்கு நவ்ஷாத்தே காரணம் என்று சவுதி இளைஞர் நீதிமன்றில் வழக்குத் தொடர்ந்தார்.

வழக்குக் காரணமாக கடந்த மூன்று வருடங்களாக நவ்ஷாத் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். அவரது மூன்று வயதுக் குழந்தையைக் கூட இதுவரை நேரில் பார்க்கவில்லை.இந்நிலையில் வழக்கில் தீர்ப்புக் கூறிய சவுதி நீதிமன்று சவுதி இளைஞரின் ஒரு கண்பார்வை பறிபோகக் காரணமான நவ்ஷாத்தின் ஒரு கண்ணைப் பறிக்க வேண்டும் என்று கொடூரமான தீர்ப்பு வழங்கியுள்ளது.



அவுஸ்திரேலியாவின் பேர்த் நகரில் வானில் இருந்து விழுந்த எரி நட்சத்திரம்.

## இப்படியும் ஒரு மோசடி

(றோம்)

இத்தாலி நாட்டின் மிலன் நகரைச் சேர்ந்த இரு நண்பர்கள்-ஒருவருக்கு வயது 74, அடுத்தவருக்கு வயது 75, இவர்கள் ஸ்டீரியோ,டி.வி.டி பிளேயர் தொலைக்காட்சிப் பெட்டி ஆகியவற்றைக் குறைந்த விலைக்கு விற்பதாக இணையத்தளத்தில் விளம்பரம் செய்தனர்.

இதைப் பார்த்துவிட்டு, பலர் பணத்தை அனுப்பிவைத்ததும் இவர்கள் டி.வி.டி ஸ்டீரியோ ஆகியவற்றை அனுப்புவதற்குப் பதிலாக உருளைக் கிழங்கு மூட்டைகளை அனுப்பி மோசடி செய்துவந்தனர். ஐந்து லட்சம் ரூபாய் கொடுத்து உருளைக்கிழங்கு மூட்டையை வாங்கிய ஒருவர் பொலிசில் புகார் செய்ததைத் தொடர்ந்து பொலிசார் அந்த இரண்டு தாத்தாக்களும் தங்கி இருக்கும் இடத்தைக் கண்டுபிடித்தனர். அங்கு பொலிசார் சோதனை போட்டபோது, பத்திற்கும் மேற்பட்ட உருளைக் கிழங்கு மூட்டைகள் அனுப்புவதற்குத் தயாராக இருந்தது கண்டு பிடிக்கப்பட்டன. அவற்றின் மதிப்பு 350 ரூபாய்க்கு மேல் இருக்காது என்று பொலிஸ் அதிகாரி கியோலானி ரோக்கா கூறினார். அந்த இரண்டு தாத்தாக்களையும் பொலிசார் கைது செய்தனர்.

## கத்தி வைத்திருந்த சீக்கியர் விடுவிக்கப்பட்டார்

(நியூயோர்க்)

அமெரிக்காவில் டெட்ராய்ட் நகரில் வசிக்கும் சீக்கிய மாணவர் சுக்பிரீத். கடந்த ஓகஸ்ட் மாதம் பொலிசாரால் கைது செய்யப்பட்டார்.

கத்தி வைத்திருப்பதைத் தடை செய்து விதிக்கப்பட்ட தடைச் சட்டத்தின் கீழ் அவர் கைதானார்.

மத வழக்கப்படி கிர்பான் எனப்படும் சிறிய கத்தியை அவர் இடுப்பில் செருகி இருந்தார்.

இதைப் பார்த்த இரண்டு பொலிசார் அவர் கத்தியை கீழே போட வேண்டும் இல்லாவிட்டால் கைது செய்யப்படுவாய் என்று கூறினார்கள். அதற்கு அவர் கீழ்ப்படியாததால் பொலி சார் அவரைக் கைது செய்தனர். அவரது கத்தியை பறிமுதல் செய்தனர். அதன்பின் அவர் பிணையில் விடுவிக்கப்பட்டார். அவர் மீது நீதிமன்றில் வழக்குத் தொடரப்பட்டது.

இதற்கிடையில் ஐக்கிய சீக்கிய சங்கமும், அமெரிக்க குடியுரிமை ஒன்றியமும் சேர்ந்து மேற்கொண்ட முயற்சிகளின் காரணமாக சுக்பிரீத் விடுவிக்கப்பட்டார்.



மசிடோனியாவின் தலைநகர் ஸ்காப்ஜி நகரில் வாட்னோ மலையின் மேலுள்ள சிலுவையின் பின்னே தெரியும் அழகிய பிறை.

## ஈரானுக்கு ரஷ்யா ஏவுகணை வழங்கும்

விமானஎதிர்ப்பு"டார்.எம்-1" ஏவுகணைகளை ஈரானுக்கு வழங்க ரஷ்யா சம்மதித்துள்ளது. இதற்கான ஒப்பந்தம் நேற்றுமுன்தினம் கையெழுத்தானது.

இந்தத் தகவலை ரஷ்ய இராணுவ மந்திரி செர்ஜி இவானோவ் நிருபர்களிடம் தெரிவித்தார். இந்த ஏவுகணை வழங்கல் விவகாரம் அந்தப்பகுதியில் நிலவும் இராணுவ சமபலத்தைப் பாதிக்காது என்றும் அவர் கூறினார். ரஷ்ய இராணுவ விநியோகம் அனைத்தும் சட்டத்துக்கு உட்பட்டே வழங்கப்படுகின்றன.

# லெப்.கேணல் ஜீவன் உட்பட 8மாவீரர்களின் நான்காவது ஆண்டு நினைவு நிகழ்வு

(மட்டக்களப்பு)

**லெப்.கேணல் ஜீவன் (சந்திரமோகன்) உள்ளிட்ட எட்டு மாவீரர்களின் நான்காமாண்டு நினைவு நிகழ்வு நேற்றுமுன்தினம் இலுப்படிச்சேனைச் சந்தியில் அமைந்துள்ள நினைவுத் தூபியில் காலை 10.00 மணியளவில் கரடியனாறு கோட்டத் தளபதி பாஸ்கரன் தலைமையில் இடம்பெற்றது**




கொழும்பு பிரதான வீதியை ஊடறுத்து வாகரைப் பிரதேசத்திற்குச் செல்லும் போது கடந்த 06.12.2001 அன்று இவர்கள் வீரச்சாவைத் தழுவிக் கொண்டனர். இந்நிகழ்வில் பொதுச் சுடரினை போராளி கீர்த்தி, தேசியக் கொடியினை மாவட்ட கட்டளைத் தளபதி கேணல் பானு ஆகியோர் ஏற்றி வைத்தனர். தொடர்ந்து ஈகச்சுடர் ஏற்றப்பட்டது.

இதில் லெப். கேணல் ஜீவன், கப்டன் சேகரன், வீரவேங்கை சங்கர், தயாகரன், திருமகன், சுஜிவன், சதானந்தம், குகராஜ் ஆகிய மாவீரர்களின் திருவுருவப் படங்களுக்கான ஈகச்சுடர்களையும் மலர்மாலைகளையும் அவர்களது பெற்றோர்களும், மற்றும் தளபதிகள், பொறுப்பாளர்களும் அணிவித்தனர்.

இதில் மாவட்டத் தளபதி நாகேஸ், ஜெயந்தன் படையணி சிறப்புத் தளபதி ஜெயார்த்தன், மாவட்ட பொருண்மியப் பொறுப்பாளர் ஈழமாறன், மாலதி படையணித் தளபதி சுகந்தி, மாவட்ட மகளிர் அரசியல் துறைப் பொறுப்பாளர் தமிழ்நிலவு, குடும்பிமலைக் கோட்டத் தளபதி உமாராம், தலைமைச் செயலக மக்கள் தொடர்பகப் பொறுப்பாளர் சீராளன், கரடியனாறுகோட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் சோழன் உள்ளிட்ட தளபதிகள், பொறுப்பாளர்கள், போராளிகள், மாணவர்கள், பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

## வதந்திகளை நம்பவேண்டாமென பொதுமக்களிடம் வேண்டுகோள்

கல்முனைப் பிரதேசத்தில் நாசகார நோக்குடன் பல்வேறு வதந்திகள் பரப்பப்பட்டு வருவதாகவும், இதனை எவரும் நம்பவேண்டாமெனவும் பொதுமக்களிடம் கோரிக்கை விடுக்கப் பட்டுள்ளது.

மருதமுனையில் இனந்தெரியாத நபர்களினால் இரண்டு முஸ்லிம் இளைஞர்கள் படுகொலை செய்யப்பட்டதைத் தொடர்ந்து ஒரு சில இடங்களில் சிறு சிறு அசம்பாவிதங்கள் இடம்பெற்றுள்ளன. இச்சம்பவங்களைத் தொடர்ந்து பெரும் வதந்திகள் மூலம் பயப்பீதி ஏற்படுத்தப்பட்டது. கல்முனை பொதுச் சந்தையில் சக்தி வாய்ந்த இரு குண்டுகள் கண்டுபிடிக்கப்பட்டதாகவும். அப்பாவித் தமிழ் மக்கள் பலர் கடத்தப்பட்டு கொலை செய்யப்பட்டுள்ளதாகவும் வதந்திகள் பரப்பப்பட்டன. இதனைத் தொடர்ந்து குறித்த பகுதி சமூகப் பெரியோர்கள் பொதுமக்களை வதந்திகளை நம்பவேண்டாம் எனவும், அமைதியாக இருக்கும் வண்ணமும் கேட்டுக்கொண்டுள்ளனர்.

## மட்டக்களப்பு அம்பாறை மாவட்டங்களில் சோதனைக் கெடுபிடியால் மக்கள் அச்சம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் முஸ்லிம் பிரதேசங்களில் கடந்த சில தினங்களாக கூடுத லான சிறிலங்கா பொலிசாரும், படையிரும் குவிக்கப்பட்டு சோதனைக்கெடுபிடி அதிகரிக்கப்பட்டுள்ளதனால் மக்கள் போக்குவரத்தில் பெரும் அச்சமடைந்து வருகின்றனர்.

காத்தான்குடி பிரதேச செயலாளர் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி மரணமடைந்ததைத் தொடர்ந்து இந்நிலைமை ஏற்பட்டிருக்கின்றது. இதனால் மக்கள் போக்குவரத்தின் போது பலத்த சோதனைக் கெடுபிடிகளுக்கும் உட்படுகின்றமையால் இயல்பு நிலை பாதிக்கப்பட்டுள்ளது.

## விவசாய உள்ளீடுகள் வழங்கல்

துணுக்காய் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் கல்விளான் கிராமத்தில் வறுமைக்கோட்டிற்குட்பட்ட ஏழு குடும்பங்களுக்கு விவசாய உள்ளீடுகள் வழங்கப்பட்டுள்ளது.

எம். ஏச். ஏ. உதவித்திட்டத்தின் கீழ் பாண்டியன்குளம் துணுக்காய் புனர்வாழ்வுக்கழகத்தினால் கடந்த ஞாயிற்றுக்கிழமை இவ் விவசாய உள்ளீடுகள் வழங்கப்பட்டுள்ளன.

மக்களது விவசாயச்செய்கையினை மேம்படுத்தும் நோக்கிலேயே இவை வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## பாதிக்கப்பட்ட மக்களுக்கு உரிய முறையில் நிவாரணம் கிடைப்பது பற்றி ஆராய்வு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு நிவாரணப் பொருட்கள் சென்றடைவதை உறுதிப்படுத்தும் முகமாக மட்டக்களப்பு அரச சார்பற்ற நிறுவனங்களின் ஒன்றியங்களின் இணையம் சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட இடங்களுக்கு விஜயம் செய்து மேற்பார்வை செய்து வருகின்றது.

இதன் ஒரு கட்டமாக கடந்த 29, 30ஆம் திகதிகளில் ஒந்தாச்சிமடம், களுவாஞ்சிக்குடி, கல்லாறு பகுதிகளுக்கு விஜயம் செய்து அங்கு சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களை சந்தித்து அவர்களது தேவைகள் ஆராயப்பட்டு அறிக்கைகள் பெறப்பட்டுள்ளதுடன் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு நடவடிக்கை எடுக்கப்படுமென இணையச் செயலாளர் தெரிவித்துள்ளார்.

## மட்டு.அம்பாறை மாவட்டங்களில் சின்ன வெங்காயத்தின் விலை அதிகரிப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் சின்ன வெங்காயத்தின் விலை அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. வெங்காயத்தின் விலை தற்போது நாளுக்குநாள் அதிகரித்து வருவதாக மேலும் தெரிவிக்கப் படுகின்றது. இப்பகுதிகளில் சின்ன வெங்காயம் ஒரு கிலோ நூறு ரூபாய் வரை விற்பனைசெய்யப்பட்டு வருவதாக குறிப்பிடப்படுகிறது.

களுதாவளையில் விவசாயிகள் அதிகளவில் வெங்காயச் செய்கையில் ஈடுபட்ட போதும் அதிக விளைச்சலைப் பெற முடியவில்லை என்று தெரிவிக்கின்றனர். சுனாமியினால் வயல் வெளி நிலங்களில் உவர்த்தன்மை, வெள்ளம் மற்றும் வெங்காயச் செய்கையில் ஏற்படுகின்ற நோய்கள் காரணமாக இம்முறை வெங்காயச் செய்கை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாக வெங்காயச் செய்கையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

## கல், மணல் அகழ்வு, கால்நடைகளை கட்டாக்காலியாக விடுவோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்

**-கிளி.கரைச்சிப்பிரதேச சபை அறிவிப்பு**

(அலுவலக செய்தியாளர்)

சட்ட விரோத கல், மணல் அகழ்வு, ஆடு,மாடு, நாய் என்பனவற்றை கட்டாக்காலியாக அலைய விடுதல் ஆகியவற்றை சட்டவிரோத நடவடிக்கைகளாக கருதி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளதாக கரைச்சிப் பிரதேசசபை அறிவித்துள்ளது. இவை குறித்து அது வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில்,

புகையிரதப் பாதை அமைந்துள்ள இடங்களிலும் ஏனைய பொது இடங்களிலும் உள்ள கற்களை சட்ட விரோதமாக ஏற்றிச் செல்வது தண்டனைக்குரிய குற்றமாகும் இவ்வாறு ஏற்றிச் செல்லும் வாகனங்கள் மீது தண்டம் அறவிடப்படுவதுடன் கற்கள் பறிமுதல் செய்யப்பட்டு காவல்துறையூடாக சட்ட நடவடிக்கையும் எடுக்கப்படும்.

மழை காரணமாக ஆறுகளில் நீர் நிரம்பியுள்ளமையினால் ஆற்றில் மணல் ஏற்ற முடியாதுள்ளது. இதன் காரணமாக மணலுக்கு அனுமதிப்பத்திரம் வழங்குவது தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது. இருப்பினும் சிலர் உருத்திரபுரம், சிவநகர், கோணாவில் வட்டக்கச்சி போன்ற இடங்களில் சட்டவிரோதமாக கழிவுநீர் வாய்க்கால்களிலும் வீதிகளிலும் மணல் அகழ்வதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இச்சட்டவிரோத செயலை நிறுத்துவதற்கான குழு தற்போது இதனை பரிசீலனை செய்து வருகின்றது. இவ்வாறான சட்டவிரோத நடவடிக்கை கண்டுபிடிக்கப்பட்டால் தண்டப்பணம் அறவிடப்பட்டு காவல்துறையூடாக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

மேலும் வீதிகளில் ஆடு,மாடு,நாய் முதலியவற்றை கட்டாக்காலியாக விடுவது சட்ட விரோத செயலாகும் எனவே ஆடு,மாடு,நாய் வளர்ப்போர் அவற்றை வீடுகளில் கட்டி வளர்க்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

மேற் கூறப்பட்ட விடயங்களை கருத்தில் கொள்ளாதவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். இதைவிட வளர்ப்பு விலங்குகள், கட்டி வளர்க்கப்படாமல் வீதிகளில் அலைகின்ற விலங்குகள் கரைச்சிப் பிரதேச சபையினரால் பிடிக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (தீ)

## மாவீரர் பெற்றோர் கௌரவிப்பு

பாண்டியன்குளம் மகாவித்தியாலயத்தில் கடந்த 23ஆம் திகதி நடைபெறவிருந்த மாவீரர் பெற்றோர் கௌரவிப்பு நிகழ்வு தவிர்க்க முடியாதகாரணத்தினால் பிற்போடப்பட்டிருந்தது.

எனவே இந்நிகழ்வு எதிர்வரும் 10ஆம் திகதி காலை 9.30 மணிக்கு பாலிநகர் மகாவித்தியாலயத்தில் நடைபெறும் என அனைவருக்கும் அறியத்தருகின்றனர் பாண்டியன்குள அரசியல்துறையினர்.

## வெள்ளத்தால் வீடுகளை இழந்தவர்களுக்கு தற்காலிக குடியிருப்பு கையளிப்பு

அண்மையில் ஏற்பட்ட மழை வெள்ளத்தினால் கிளிநொச்சி மாவட்டத்தில் அக்கராயன் குளத்தில், அக்கராயன் குளத்தை அண்டிய பகுதிகளில் வசித்து வீடுகளை முற்றாக இழந்த 32குடும்பங்களுக்கு யுனிசெவ் நிறுவன நிதியுதவியுடன் தமிழர் புனர்வாழ்வுக்கழக அனுசரணையுடன் கரைச்சிப்பிரதேச செயலகம், அக்கராயன் அபிவிருத்தி நிறுவனம் ஆகியன இணைந்து தற்காலிக கொட்டகைகளை அமைத்து நேற்று முன்தினம் பிற்பகல் அவர்களிடம் கையளித்துள்ளது.

அக்கராயன் அபிவிருத்தி நிறுவனத் தலைவர் ச.கிருஷ்ணபிள்ளை தலைமையில் ஆரம்பமான நிகழ்வில், மங்கல விளக்கினை ஸ்கந்தபுரம் கிராம அலுவலர் க.மகேந்திரன், கிளி மாவட்ட போரூட் நிறுவன திட்ட உதவியாளர் மாரி அம்மையார், அக்கராயன் தென்னிந்தியத்திச்சபையின் சௌந்தரநாயகம் அடிகளாரும் ஏற்றி வைத்தார்கள்.




## சிறுவர்களுக்கான விளையாட்டு பூங்கா திறந்து வைப்பு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவில் சுனாமியால் பாதிக்கப்பட்டு இடம் பெயர்ந்து தற்காலிக குடியிருப்பில் வாழும் வண்ணாங்குளம்'பி' முகாம்சிறார்களுக்கான விளையாட்டுப்பூங்கா திறப்பு விழா கடந்த சனிக்கிழமை இடம் பெற்றுள்ளது. பிற்பகல் 4.30 மணிக்கு சிறுவர் பூங்கா பொறுப்பாசிரியர் தலைமையில் ஆரம்பமான நிகழ்வில் மங்கல விளக்கினை வேள்ட்விஷன் நிறுவன வலயமுகாமையாளர், வடமாகாண வலய முகாமையாளர் ஆகியோர் ஏற்றினார்கள். தொடர்ந்து கட்டடத்தினை வேள்ட்விஷன் நிறுவனத்தின் வடபிராந்திய பணிப்பாளர் திறந்து வைத்தார். இந்நிகழ்வில் கருத்துரைகளும் சிறார்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றதுடன் நிகழ்வில் பெருமளவான மக்களும் கலந்து கொண்டனர். (20)

## பல்பொருள் வாணிப நிலையம் தீக்கிரை பல்லாயிரம்ரூபா பெறுமதியான பொருட்கள் சேதம்



(உடையார்கட்டு)

உடையார்கட்டு-மூங்கிலாறில் மில்லர் திட்டத்தில் நேற்றுமுன் தினமிரவு ஒன்பது மணியளவில் ஏற்பட்ட தீ விபத்தினால் பல்பொருள் வாணிப நிலையம் தீக்கிரையாகியுள்ளது.

இவ் வாணிப நிலையத்தில் இருந்த பல்லாயிரம் ரூபா பெறுமதியான பொருட்கள் அழிவுக்குறப்பட்டதுடன், அருகில் நின்ற உந்துருளியும் முற்றாகத் தீக்கிரையானது.

இவ்வாணிப நிலையம் மில்லர் திட்டத்தில் வசிக்கும் கோபி சங்கர் என்பவருக்குச் சொந்தமானது. இச்சம்பவத்தின்போது அருகிலிருந்த உந்துருளி எரிந்துள்ளமையை படத்தில் காணலாம். (19)

# இடம் பெயர்ந்த மக்களை மீளக்குடியமர்த்துவது தொடர்பில் முழுமையான அறிக்கை வேண்டும்"

## -யாழ். அரச அதிபருக்கு உயர் நீதிமன்று உத்தரவு



**இராணுவ ஆக்கிரமிப்பு காரணமாகவும், அதியுயர் பாதுகாப்பு வலயம் காரணமாகவும் இடம் பெயர்ந்து தமது வீடுகளையும் நிலங்களையும் இழந்த மக்களை அந்த இடங்களில் அல்லது வேறு இடங்களில் மீளக்குடியமர்த்துவதற்கான வாய்ப்புக்கள் குறித்து முழுமையான அறிக்கைகளை ஒப்படைக்குமாறு யாழ்ப்பாணம் அரச அதிபருக்கு உயர்நீதி மன்றம் உத்தரவிட்டுள்ளது.**

உயர்பாதுகாப்பு வலயங்கள் என்ற பெயர்களில் தங்களது வீடுகள், காணிகள் ஆக்கிரமிக்கப்பட்டதை எதிர்த்து, மேற்படி பிரதேச மக்கள் சார்பாக தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜாவும், நான்கு விவசாயிகளும் தாக்கல் செய்துள்ள அடிப்படை உரிமைகள் மீறல் வழக்கு திங்கட் கிழமை உயர்நீதிமன்ற நீதியரசர்கள், நிஹால் ஜயசிங்க,திசங்க உடகம, நிமால்திஸாநாயக்க ஆகியோர் முன்னிலையில் எடுத்துக் கொள்ளப்பட்டபோதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இதற்கு முன்னரும் இது தொடர்பான வாய்ப்புக்களை தெரிவிக்குமாறு யாழ்ப்பாணம் அரச அதிபரைக் கோரியிருந்த உயர்நீதி மன்றம் தற்போது இது தொடர்பான முழுமையான அறிக்கை ஒன்றை சமர்ப்பிக்குமாறு பணித்திருப்பது குறிப்பிடத்தக்கது.

# யுத்த அச்சம் காரணமாக யாழ். பல்கலை சிங்கள மாணவர் வெளியேறினர்

(யாழ்ப்பாணம்)

கடந்த சில நாட்களாக யாழ்ப்பாணத்தில் தொடர்ச்சியாக இடம் பெற்று வரும் வன்செயல் களைத்தொடர்ந்து யுத்தம் தொடங்கிவிடும் எனக்கருதி யாழ்ப்பாணப்பல்கலைக்கழகத்தில் மருத்துவபீடத்தில் கல்வி கற்று வரும் சிங்கள மாணவர்கள் தென் பகுதி பல்கலைக்கழகங்களுக்கு இடமாற்றம் செய்வதற்கான முயற்சிகளில் ஈடுபட்டு வருவதாக தெரியவருகிறது.

இதற்கான அழுத்தங்களை அரசுக்குக் கொடுத்து அனுமதிகளை தென் பகுதிகளில் பெறுவதற்காக, அவர்களில் பெரும்பான்மையான மாணவர்கள் நேற்று முன்தினம் தென்பகுதிக்கு புறப்பட்டுள்ளதாக தெரியவருகின்றது.

இது தொடர்பாக யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் மற்றும் பீடாதிபதி ஆகியோருடன் தாம் கலந்துரையாடியுள்ளதாக அவர்கள் தெரிவித்துள்ளனர். கடந்த திங்களன்று இரவு பல்கலைக்கழக மாணவர் விடுதியில் சக தமிழ் மாணவர்களுடனும் இது சம்பந்தமாக அவர்கள் கலந்துரையாடியுள்ளனர் எனவும் தெரிவருகின்றது.

# வீதித்தடைகளை ஏற்படுத்தி வரும் படையினர்

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் பெரும்பாலான வீதிகளில் இராணுவக்காவலரண்கள், முகாம்கள் அமைந்துள்ள இடங்களில் இராணுவத்தினர் வீதித்தடைகளை ஏற்படுத்தி வருகின்றனர்.

இராணுவத்தினரால் ஏற்படுத்தப்பட்டு வரும் வீதித்தடைகள் காரணமாக போக்குவரத்து மேற்கொள்வதில் பொதுமக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

யுத்த காலங்களில் படையினரால் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கை போன்று பல்வேறு இடங்களில்நடைபெற்று வருகின்றது. யாழ் குடாநாட்டின் பல்வேறு பிரதேசங்களில் இருந்து நகருக்கு வருகின்ற பொது மக்கள் இராணுவத்தினரது இத்தகைய செயற்பாடுகளால் பெரும் குழப்பமடைந்துள்ளனர். (கீ)

# சுனாமியால் பாதிக்கப்பட்ட சுழிபுரம் கடற்றொழிலாளர்களுக்கு "கரித்தாஸ்" உதவி

யாழ்.சுழிபுரம் பிரதேசத்தில் சுனாமியால் பாதிக்கப்பட்ட கடற்றொழிலாளர் குடும்பங்களுக்கு பல்வேறுபட்ட உதவிகளையும் கரித்தாஸ் நிறுவனம் வழங்கிவருகின்றது.

அந்தவகையில் அண்மையில் சுனாமியால் பாதிக்கப்பட்ட சுழிபுரம் கடற்றொழிலாளர்களுக்காக கரித்தாஸ் நிறுவனம் 13 பேருக்கு படகுகளையும், 13 பேருக்கு வெளியிணைப்பு இயந்திரங்கள் மற்றும் வலைத் தொகுதிகள் என்பவற்றையும் வழங்கியுள்ளது.

சுனாமியால் பாதிக்கப்பட்ட சுழிபுரம் கடற்றொழிலாளர்களது தொழிற்தரத்தை மேம்படுத்தும் நோக்குடன் வழங்கப்பட்ட இக் கடற்றொழில் உபகரணங்கள் யாவும் கடற்றொழிலாளர் சங்கங்களூடாக கடற்றொழிலாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

இதேவேளை கரித்தாஸ் என்ற பிரித்தானிய நிறுவனம் சுனாமியால் பாதிக்கப்பட்ட சுழிபுரம் பகுதிவாழ் மக்களுக்காக சமையல் பாத்திரங்கள் உட்பட பல உதவுப்பொருட்களையும் ஏற்கனவே வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (33)

# குடாநாட்டில் இராணுவத்தினர் நடமாட்டம் இரவு வேளைகளில் அதிகரிப்பு

யாழ்.நகரிலும் அதனை அண்டியிருக்கும் சகல வீதிகளிலும் இரவு வேளைகளில் சிறிலங்கா இராணுவத்தினரது நடமாட்டங்கள் மிகவும் அதிகரித்துக் காணப்படுகின்றன.

அரசு-புலிகளுக்கிடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்படுவதற்கு முன்னரான யுத்த சூழ்நிலையில் இருந்ததைப் போல மீண்டும் இரவு வேளைகளில் காணப்படும் இவ் இராணுவ நடமாட்ட அதிகரிப்பினால் மக்கள் மத்தியில் பெரும் பீதி ஏற்பட்டுள்ளது.

குறிப்பாக பொழுது சாய்ந்த பின்னர் மக்கள் வீதிகளில் நடமாடவோ வீடுகளை விட்டு வெளியில் வரவோ முடியாது. மாலையானதும் வீடுகளுக்குள்ளேயே முடங்கிக் கிடக்கின்றனர். அவசரதேவைகளுக்காகக் கூட வீடுகளை விட்டு வெளியேவர மக்கள் அஞ்சுகின்றனர்.

வீதிகளில் நின்று காவல்கடமைகளில் ஈடுபடும் இராணுவம் காரணமின்றி மக்களைத் தாக்குவதாலும் திடீர்திடீரென கண்மூடித்தனமான துப்பாக்கிப் பிரயோகங்களைச் செய்வதன் காரணமாகவும் மக்கள் மத்தியில் இந்தப் பீதி நிலை மேலும் அதிகரித்துள்ளது.

இந்நிலைமையானது யாழ்ப்பாண மக்களது சுதந்திரமான நடமாட்டத்தை அச்சுறுத்தலுக்குள்ளாக்கியிருப்பதுடன் இயல்பு நிலைமையையும் வெகுவாகப் பாதித்துள்ளது. (33)

# தேசிய தொழில் பயிலுனர் தகைமைகள் சான்றிதழ் பயிற்சி நெறிக்கான விண்ணப்பம் கோரல்

இலங்கை தொழில் நுட்பக் கல்வி பயிற்சி திணைக்களம் தொழிநுட்பக்கல்லூரிகளில் தேசிய தொழில் பயிலுனர் தகைமைகள் சான்றிதழ் பயிற்சி நெறிக்கான விண்ணப்பங்களைக்கோரியுள்ளது.

தமிழ், ஆங்கிலம், சிங்களம் மூலம் 36 தொழில் நுட்பக்கல்லூரிகளில் 16பயிற்சி நெறிகள் இடம் பெறவுள்ளன.

தமிழ் மொழிமூலம் யாழ்ப்பாணம், வவுனியா, திருகோணமலை, மட்டக்களப்பு, சம்மாந்துறை ஆகிய தொழில் நுட்பக்கல்லூரிகளில் பயிற்சிகள் இடம் பெறவுள்ளன.

ஆறுபயிற்சி நெறிகள் மட்டும் தமிழ் மொழி மூலம் நடத்தப்படவுள்ளன.இப்பயிற்சி நெறிகளுக்கு இரண்டு தடவைகளில் க.பொ.த. சாதாரண பரீட்சைக்கு தோற்றி ஆறு பாடங்களில் தேர்ச்சி பெற்றோர் விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்பங்கள் இம்மாதம் 23ஆம் திகதிக்கு முன்னதாக விண்ணப்பிக்கும் பயிற்சி நெறிக்கான தொழில்நுட்பக்கல்லூரிகளுக்கு அனுப்பி வைக்கப்படவேண்டும்.

மேலதிக விபரங்களை தொழில் நுட்பக்கல்லூரிகளிலும் மற்றும் நவம்பர் மாதம் 18ஆம் திகதி அரச வர்த்தமானியிலும் பெற்றுக்கொள்ள முடியும்.

தமிழ் மொழிமூலம் மோட்டார் சைக்கிள் திருத்துனர், கட்டடவேலை, தச்சுவேலை,வில்பற்றாசு பிடிப்பவர், நீர்குழாய் பொருத்துனர், குளிரூட்டலும்மற்றும் வாயுசீராக்கலும் ஆகிய பயிற்சி நெறிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

ஒரு வருடத்தைக்கொண்ட இப் பயிற்சிநெறியினைப்பயிலும் மாணவர்களுக்கு மாதாந்தம் 450ரூபாவுக்கு மேற்பட்ட உதவு தொகை வழங்கப்படுவதுடன், பயிற்சி நெறியில் தெரிவு செய்யப்படும் 600 மாணவர்களுக்கு ஒரு வருடத்திற்கு அவர்களின் பொருளாதார நிலைமையைக்கருத்தில் கொண்டு நன்கொடையாக இரண்டாயிரத்துஐநூறு ரூபா மேலதிகமாக வழங்கப்படவுள்ளது.

பயிற்சி நெறி பூர்த்தி முடிவில் சர்வதேச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ்கள் வழங்கப்படவுள்ளன.(41)

# பலத்த பாதுகாப்புடன் பயணம் செய்யும் யாழ். குடாநாட்டு இராணுவத்தினர்

யாழ். குடாநாட்டில் தற்பொழுது தொடர்ந்து இடம் பெற்று வரும் வன்முறைகளால் கலக்கம் அடைந்துள்ள படையினர் தற்பொழுது நான்கு,ஐந்து ட்ரக், வண்டிகளில் பயணம் மேற்கொள்ளும் போது உடனே முன்னுக்கும் பின்னுக்கும் பவள் கவசவாகனம்,பீரங்கி வண்டிகளை முன்னகர்த்தியே தமது பயணங்களை மேற்கொண்டு வருவதாக தெரியவருகிறது மற்றும் படையினர் தற்பொழுது பயணம் செய்யும் பேருந்துகளுக்கும் இவ்வாறான பாதுகாப்பு கவசவாகனங்களுடன் பீல்ட்பைக் படையினரும் பாதுகாப்பு வழங்கி வருவதுடன் வீதி ரோந்து காவலிலும் அதிகளவான படையினர் ஈடுபட்டு இருப்பதுடன் பொது மக்கள் பயணம் செய்யும் வாகனங்களும் திடீர் திடீரென படையினரால் மறிக்கப்பட்டு சோதனையிடப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (28)

# யாழ்.தீவகக் கடற்பரப்பில் கடற்படையின் கண்காணிப்பு அதிகரிப்பு

யாழ்.தீவகக்கடற்பரப்பில் சிறிலங்கா கடற்படையினரது கடற்கண்காணிப்பு ரோந்து நடவடிக்கைகள் என்றும் இல்லாதவாறு அதிகரித்துள்ளது.

அண்மைக்காலமாக யாழ். குடாநாட்டில் இராணுவத்தினரை இலக்கு வைத்து நடத்தப்படும் தாக்குதல்கள் அதிகரித்து வருகின்ற நிலையில் இவ்வாறான தாக்குதல்கள் கடற்படையினர் மீதும் நடத்தப்படலாம் என்ற அச்சத்தின் காரணமாகவே தீவகப்பகுதியில் கண்காணிப்பு ரோந்து நடவடிக்கைகளைக் கடற்படையினர் அதிகரித்துள்ளனர்.

இது மட்டுமன்றி கடற்பரப்பை நோக்கி திடீர் திடீரென கடற்படையினர் துப்பாக்கிப்பிரயோகங்களையும் மேற்கொண்டும் வருவதாகத் தெரிவிக்கும் தீவகப்பிரதேச கடற்றொழிலாளர்கள் படையினரது இத்தகைய அச்சமூட்டும் நடவடிக்கைகளால் கடந்த சில நாட்களாக ஏராளமான கடற்றொழிலாளர்கள் கடற்றொழிலுக்குச் செல்லவில்லை என்றும் கூறுகின்றனர்.

இதேவேளை தீவகத்திலுள்ள கடற்கரையோர காவலரண்களையும், மினி முகாம்களையும் தீவிரமாகப் பலப்படுத்திவரும் கடற்படையினர் எந்நேரமும் தாக்குதல்களை சமாளிக்கக் கூடிய வகையில் உசார்நிலையிலுள்ளதாகவும் கூறப்படுகின்றது. (33)

# பொலிஸ் நிலையங்களில் பாதுகாப்பு மேலும் பன்மடங்கு அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் படையினர் மற்றும் பொலிசார் மீதான தாக்குதல் சம்பவங்கள் அதிகரித்ததையடுத்து, யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள பொலிஸ் நிலையங்களில் பாதுகாப்பினை மேலும் அதிகரிக்குமாறு சிறிலங்கா பொலிஸ் தலைமைப்பீடத்திலிருந்தும், பாதுகாப்பு அமைச்சிலிருந்தும் பணிப்புரைகள் விடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

தாக்குதல் சம்பவங்கள் அதிகரித்ததைத்தொடர்ந்து அனைத்து பொலிஸ் நிலையங்களின் பாதுகாப்பையும், உறுதிப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் அனைத்தையும் மேற்கொள்ளுமாறும் பொலிஸ் அதிபரிடமிருந்தும் பாதுகாப்பு அமைச்சிடம் இருந்தும் பணிப்புரைகள் விடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரியவருகின்றது.

அத்துடன் தி[illegible] தேடுதல்கள், வீதித்தடைகள் என்பனவற்றை மேற்கொள்ளவும் உ[illegible] பிறப்பிக்கப்பட்டுள்ளது.

# 35 வருடங்களாக புனரமைக்கப்படாத கற்கோவளம்-மாதனை வீதி

யாழ். பருத்தித்துறைப் பிரதேசத்திலுள்ள கற்கோவளம்- மாதனை வீதி 35 வருடங்களுக்கு மேலாகப் புனரமைப்புச் செய்யப்படாத நிலையில் மிக மோசமாகச் சேதமடைந்து காணப்படுகின்றது.

இதன் காரணமாக நாளாந்தம் இவ்வீதியால் பயணம் செய்யும் பாடசாலை மாணவர்களும், பொது மக்களும் பெரும் சிரமங்களுக்குள்ளாகின்றனர். குறிப்பாக இவ்வீதி பாரிய குன்றும் குழியுமாக உள்ளதால் இவ்வீதியூடாகப் பயணம் செய்ய முடியாது. வாகனங்கள் யாவும் மாற்று வழிகளை பயன்படுத்தியே பயணம் செய்கின்றன.

இதனால் மேற்படி வீதியைப் புனரமைத்துத்தருமாறு பருத்தித்துறைவாழ் மக்கள் வீதி அபிவிருத்திப் பிரிவினரிடம் பல தடவைகள் கோரிக்கை விடுத்த போதும் அதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை என்று விசனம் தெரிவிக்கப்படுகின்றது. (33)

# அரசின் வெற்றியை பாதுகாக்க வேண்டுமானால் புலிகளுடன் உடன் பேச்சை ஆரம்பிக்க வேண்டும்

**2005** ஆம் ஆண்டு நவம்பர் 27 ஆம் திகதி மாவீரர் தின உரையில் விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் அவர்கள் அரசாங்கத்திற்கு எதிராக யுத்தப் பிரகடனம் செய்யப் போகிறார் என சிலர் நினைத்தார்கள்.

அப்படி எதுவும் நடக்கவில்லை. அதற்குப் பதிலாக புதிய அரசுக்கு வடக்கு-கிழக்கு பிரச்சினையை தீர்த்து வைப்பதற்கு கால அவகாசத்தை வழங்கியுள்ளார்.

குறுகிய கால அவகாசம் என அதில் குறிப்பிட்டுள்ளார். ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க விடுதலைப்புலிகளை வலைக்குள் சிக்கவைப்பதற்கு முயற்சிகளை மேற்கொண்டுள்ளார் என பிரபாகரன் குறிப்பிட்டுள்ளார். இது ஐக்கிய தேசியக் கட்சிக்கு விடுத்துள்ள எச்சரிக்கையாகும். மற்றும் அவர் கடந்த காலங்களின் பொழுது விடுதலைப் புலிகளை சர்வதேச சமூகங்களுக்கிடையில் சிக்க வைப்பதில் முயற்சிகளை மேற்கொண்டுள்ளார் என்பதை சூசகமாக வெளியிட்டுள்ளார்.

இக் குற்றச்சாட்டை ரணில் விக்கிரமசிங்க மீது நேரடியாக சுமத்தியுள்ளார். இதே நேரத்தில் புதிய சனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஒரு யதார்த்தவாத தலைவர் என கேள்விப்பட்டுள்ளதாகவும் கூறியுள்ளதன் மூலம் மாவீரர் தின உரையில் தனது ராஜதந்திரத்தை மிகத் தெளிவாக வெளிப்படுத்தியுள்ளார். இதை அரசு சாதகமாகப் பயன்படுத்தி சமாதானத்திற்கான வழியின் முதல் படியில் காலடி எடுத்து வைத்து வழுக்கி விழாமல் நடப்பதற்கு முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்பதே எங்களின் விருப்பமாகும். இது சம்பந்தமாக திணமின பத்திரிகை செய்தியின் படி நாட்டிற்கு சமாதானத்தை ஏற்படுத்துவதற்கு தன்னால் விடுக்கப்பட்ட கோரிக்கையை நட்புறவு முறையில் நீடிப்பதற்கு தலைவர் பிரபாகரன் அறிக்கை விட்டுள்ளதைத் தாம் மிக உயர்வாக கருதுகிறேன் என சனாதிபதி ராஜபக்ஷ அறிக்கை வெளியிட்டுள்ளார். பிரபாகரன் யுத்தத்தை நடத்தும் அதே வேளையில் தனது அரசியல் நகர்வுகளையும் வெகுதிறமையாக மேற்கொண்டு வருகிறார். ஆனால் புதிய சனாதிபதிக்கு கால அவகாசம் வழங்கியது தலைவர் பிரபாகரனின் அரசியல் நாகரிகத்தைக் காட்டியுள்ளது. ஐக்கிய தேசியக் கட்சி நினைப்பது போல் அவர்கள் திடீரென யுத்தத்தை தொடக்க மாட்டார்கள். இதே நேரத்தில் விடுதலைப்புலிகளின் ஆலோசகரும் தத்துவாசிரியருமான அன்ரன் பாலசிங்கம் இக்கால நீடிப்பு ஒரு வருடகாலமாகவும் அமையலாம் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

இவர்கள் சமாதான நடவடிக்கை முன்னெடுப்புக்காக அரசுக்கு இடைவெளி ஒன்றைத் தந்துள்ளார்கள் .விடுதலைப்புலிகள் திடீரென யுத்தத்தை ஆரம்பிக்க மாட்டார்கள், இதை சர்வதேச சமூகம் ஏற்றுக் கொள்ளாது .ரணில் விக்கிரமசிங்கவின் சர்வதேச வலைப்பின்னல் விடுதலைப்புலிகளை கட்டுப்படுத்தும் ஒரு நடவடிக்கையாகும் என்பதை உணர்ந்துள்ளபடியால் இவைகளுக்கெல்லாம் முடிவு கட்டுவதற்கு அரசாங்கம் வெகுவிரைவில் தீர்மானம் எடுக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது.

அதாவது நடந்து முடிந்த சனாதிபதித் தேர்தல் சிறுபான்மை இனத்தவர்களுக்கும் அரசுக்கும் இடையில் ஏற்பட்டுள்ள அரசியல் பிரதி பலன்களை நன்றாக எடுத்துக் காட்டியுள்ளது. இம்முறை அது அதிகரித்துள்ளது. சிறுபான்மை இனத்தவர்களின் அதிகமான வாக்குகள் ரணில் விக்கிரசிங்கவுக்கு கிடைத்துள்ளன.

ஆகையினால் சனாதிபதி மகிந்த ராஜபக்ஷ சிறுபான்மை இனத்தவர்களின் ஆதரவைப் பெற்றுக்கொள்வதில் மிக ஆர்வமுடன் செயற்பட வேண்டும். மேலும் விடுதலைப்புலிகளுக்கு எதிரானவர்களும் தற்பொழுது அரசில் அங்கம் வகிப்பவர்களும் சமஷ்டி முறையை ஆதரிக்கின்றனர். இந்தியாவிலுள்ள சமஷ்டி முறையை இங்கு அமுல்படுத்தும்படி சனாதிபதியிடம் கோரப்படுகிறது. அதிகாரப் பரவலாக்கல், மாகாண சபை ஆட்சியை வழங்க வேண்டும். பாராளுமன்றத்திற்கு புறம்பாக சட்டங்களை அமுல்படுத்துதல், மாகாண பொலிஸ் அதிகாரங்கள், நீதிமன்றங்கள் இவைகள்யாவும் மாகாண சபையின் அதிகாரங்களின் கீழ் இயங்கும். ஆனால் இவற்றை ஜே.வி.பியும் ஜாதிக ஹெல உறுமய கட்சியும் முற்றாக எதிர்க்கின்றபடியால் இப்பிரச்சினையைத் தீர்ப்பதில் பெரும் சிரமங்களை உண்டு பண்ணும்.

இவற்றை உணர்ந்து சனாதிபதி தற்பொழுது சில நடவடிக்கைகளை துரிதமாக செயற்படுத்துகின்றார். அவற்றை மறைந்த சனாதிபதி ஆர். பிரேமதாசவின் நடவடிக்கைகளுக்கு சமனாகக் கருத வேண்டும்


இனப்பிரச்சினை சம்பந்தமாக சனாதிபதி மகிந்த துரித நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார் விடுதலைப் புலிகளுடன் வெகுவிரைவில் பேச்சு வார்த்தைகளை ஆரம்பித்து நல்லதொரு முடிவை எடுப்பதே மகிந்தவின் சிந்தனையில் அடங்கி உள்ளதென்பதை அவரின் தற்போதைய அரசியல் நடவடிக்கைகள் மூலம் தெரியவருகின்றது.

தற்பொழுது விடுதலைப் புலிகளை சமாதான மேசைக்கு வருமாறு சனாதிபதி அழைப்பு விடுத்துள்ளார் அந்த அழைப்பை புலிகள் நிராகரிக்கமாட்டார்கள். அதை அவர்கள் ஏற்றுக்கொண்டுள்ளனர். இதை எவராலும் தடுத்து நிறுத்த முடியாது. ஐக்கிய தேசியக் கட்சியும் இதை வரவேற்கும். ஏனெனில் சமாதானப் பேச்சு வார்த்தைகள் சம்பந்தமாக அவர்கள் உறுதியான நிலைப் பாட்டில் உள்ளனர். சமஷ்டி முறையில் அதிகாரப் பரவலாக்கல் மூலம் இப்பிரச்சினையை அரசு தீர்த்துவைத்தால் ஐக்கிய தேசியக் கட்சி எதிர்க்காது வரவேற்கும். அனுசரணைகளையும் வழங்கும். விடுதலைப்புலிகளும் வடக்கு-கிழக்கு தமிழ் மக்களும் கடைசி பேச்சுவார்த்தைகள் மூலம் தீர்வுகாண்பதற்கு சம்மதிப்பார்களானால் இது அரசுக்கும் நாட்டிற்கும் மாபெரும் வெற்றியாகும். ஆகையினால் சகல மக்களும் இதற்கு பூரண ஒத்துழைப்பை வழங்குவது மிக அவசியமாகும். ஐக்கிய தேசியக் கட்சியும் புலி-யானை நாடகத்தை அரங் கேற்றுகின்றார்கள் என்ற குற்றச்சாட்டில் இருந்து விடுதலை பெற்றுவிடுவர்.

இப்பொழுது அரசாங்கம் விடுதலைப்புலிகளுக்கு நிபந்தனைகளை விதிக்காமல் அவர்களை சமாதானப் பேச்சுவார்த்தைகளில் கலந்துகொள்ள வைப்பதில் அக்கறையுடன் செயற்பட வேண்டும்.

அரசாங்கத்தின் வெற்றியைப் பாதுகாக்க வேண்டுமானால் சமாதானப் பேச்சுவார்த்தைகளை அரசு உடன் ஆரம்பிக்க வேண்டும். இனவாதிகளுக்கு இடம் கொடுக்காமல் சனாதிபதி வீறு நடைபோட வேண்டும். இப்பேச்சுவார்த்தைகளை எதிர்க்கட்சி எதிர்க்காது. இது தேசியப் பிரச்சினை என்றபடியால் நிச்சயமாக எதிர்க்கட்சி இதற்கு ஆதரவை வழங்கும். இச்சந்தர்ப்பத்தை அரசு பயன்படுத்திக் கொள்ள வேண்டும். தேசியப் பிரச்சினையைத் தீர்ப்போம் எனக் கூறியே சனாதிபதித் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியை தோல்வி அடையச் செய்து ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி வெற்றி பெற்றுள்ளது.

ஆகையினால் புதிய சனாதிபதியின் சமாதானப் பேச்சின் அணுகுமுறைகளை ஐக்கிய தேசியக் கட்சி எதிர்க்காது. காரணம் ஐக்கிய தேசியக் கட்சிக்குள் தற்பொழுது சில உட்பூசல்கள் வெடிக்கத்தொடங்கியுள்ளன. ஆகையினால் காலத்தைக் கடத்தாமல் விடுதலைப்புலிகளுடனும் வடக்கு-கிழக்கு மக்களுடனும் சமாதானப் பேச்சு வார்த்தைகளை ஆரம்பித்து நல்லதொரு தீர்வை சனாதிபதி எடுப்பார் என்பதை நாங்கள் நம்புகின்றோம்.



**ஞாயிறு திணமின**
**சிங்கள நாளிதழ்**
**அ. சன்ஜன்**
**மொழியாக்கம்**
**அ. சக்திவேல்**

# ஹான்ஸ்பிரஸ்கர்-ரவூப்ஹக்கீம் நேற்று முன்தினம் சந்தித்து பேச்சு

முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீமுக்கும் நோர்வே தூதுவர் ஹான்ஸ்பிரஸ்கருக்கும் இடையில் நேற்று முன்தினம் சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

கிழக்கில் தொடரும் வன்முறைகள் குறித்தும் அவற்றைக் கட்டுப்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்தும் ரவூப்ஹக்கீம் நோர்வே தூதுவருக்கு எடுத்து விளக்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை இலங்கையின் சமாதான முயற்சிகளில் நோர்வே அரசாங்கத்தின் பங்களிப்பு குறித்து தெளிவான நிலைப்பாடு எதனையும் இலங்கை அரசாங்கம் அறிவிக்காத நிலையில் தம்மால்உரிய நடவடிக்கைகளை எடுக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக நோர்வே தூதுவர் ஹான்ஸ்பிரஸ்கர் சுட்டிக்காட்டியதாகவும் குறிப்பிடப்படுகிறது கிழக்கில் தமிழ்-முஸ்லிம் மக்களுக்கு இடையில் ஏற்படுத்தப்படும் ஆத்திர மூட்டும் சம்பவங்கள் குறித்து மக்கள் விழிப்புடன் செயற்படவேண்டும் எனசிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப்ஹக்கீம் தெரிவித்தார்.

முஸ்லிம்களின் பாதுகாப்புக்கு அரசாங்கம் உத்தரவாதமளிக்க வேண்டும் எனவும் ரவூப் ஹக்கீம் அரசாங்கத்தை கேட்டுக்கொண்டுள்ளார்.

இதேவேளை கிழக்கு மாகாணத்தில் இடம்பெற்றுவரும் கொலைச் சம்பவங்களினால் ஏற்பட் டுள்ள பதற்ற சூழ்நிலை குறித்து தேசிய ஐக்கிய முன்னணி தலைவி பேரியல் அஷ்ரப் சனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை சந்தித்து உரையாடியுள்ளார்.

சுனாமிக்கு பிறகு முன்னேற்றமடைந்துள்ள தமிழ் முஸ்லிம் நல்லுறவை சீர்குலைக்கும் வகையில் கடந்த சில நாட்களாக சதித்திட்ட முயற்சிகள் தொடர்ச்சியாக நடைபெற்று வருவதாகவும் இந்த நிலையில் தமிழ்-முஸ்லிம் கிராமங்களில் பாதுகாப்பை பலப்படுத்த வேண்டியதன் அவசியத்தையும் அவர் சனாதிபதியிடம் வலியுறுத்தியுள்ளார்.

## வாசஸ்தலம் இல்லாமையால் சந்திரிகா அவதி!

(கொழும்பு)

சிறிலங்காவின் முன்னைய சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தான் வசிப்பதற்கு உத்தியோக பூர்வ வாசஸ்தலம் கிடைக்கும் வரை அவரின் தகப்பனாரின் சொந்த வாசஸ்தலமான வேயங்கொட ஹொரகொல்ல வீட்டில் தற்பொழுது தங்கியுள்ளார் என செய்திகள் வந்துள்ளன.

# முஸ்லிம் ஆசிரியர்களுக்கு தமிழீழ காவல்துறை பாதுகாப்பு

திருகோணமலை மாவட்டம் மூதூர் பகுதியில் தமிழ் - முஸ்லிம் மக்களிடையே கலவரத்தை உண்டாக்கும் நாசகார நோக்குடன் சிறிலங்கா படைகளுடன் சேர்ந்தியங்கும் சில தீய சக்திகள் மேற்கொண்ட கொலைகளையடுத்து ஏற்பட்டுள்ள பதற்ற சூழ்நிலையில், கணேசபுரம் மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற கருத்தரங்கில் கலந்துகொண்ட 36 முஸ்லிம் ஆசிரியர்களிற்கு தமிழீழ காவல்துறையினரால் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

தோப்பூர் மற்றும் மூதூர் இராணுவ ஆக்கிரமிப்புப் பகுதிகளிலிருந்து 36 ஆசிரியர்கள் இக்கருத்தரங்கில் கலந்து கொண்டனர்.

கருத்தரங்கு நிறைவடைந்ததைத் தொடர்ந்து இவர்களை சிறப்பான பாதுகாப்புடன் தமிழீழ காவல்துறையினர் கட்டைப்பறிச்சான் முன்னரங்க நிலைகள் வரை அழைத்துச் சென்று வழியனுப்பி வைத்தனர்

*—அரசியலமைப்பு சபைக்கு—*

# உறுப்பினர்கள் நியமிப்பது குறித்து கட்சித்தலைவர்களைச் சந்திக்கவுள்ள பிரதமர்

அரசியல் அமைப்பு சபை தொடர்பில் நாளை பிரதமமந்திரி ரட்ணசிறி விக்கிரமநாயக்க கட்சி தலைவர்களை சந்திக்கவுள்ளார்.

இந்த சந்திப்பின் போது அரசியலமைப்பு சபைக்கு உறுப்பினர்களை நியமிப்பது தொடர்பான முக்கிய விடயம் குறித்து சபாநாயகரின் கவனத்திற்கு கொண்டு வரப்படும் என பிரதமமந்திரி தெரிவித்துள்ளார்.சனாதிபதியின் பணிப்பின்பேரிலேயே இந்தக் கூட்டம் ஏற்பாடு செய்யப்படட்டுள்ளது. அரசியலமைப்பு சபைக்கு உறுப்பினர்கள் நியமிக்கப்படாமை காரணமாக அண்மையில் தமது பதவிக்காலம் முடிவடைந்த ஆணைக்குழுக்கள் செயற்பாடுகளை மேற்கொள்ளமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இதனையடுத்தே சனாதிபதியினால் இந்த கூட்டத்தை கூட்டுமாறு பிரதம மந்திரிக்கு பணிக்கப்பட்டுள்ளார்.

# சிங்கள பேரினவாத சதி வலையில் வீழ்ந்து குழப்பங்களுக்கு ஒத்துழைக்க வேண்டாம்

## புலிகளின் மட்டு. மாவட்ட அரசியல் துறை வேண்டுகோள்

(மட்டக்களப்பு)

**காத்தான்குடிப் பிரதேச செயலாளர் பளீல் படுகொலையை தமிழீழவிடுதலைப்புலிகள் வன்மையாகக் கண்டித்துள்ளனர். இது தொடர்பாக மட்டக்களப்பு மாவட்ட அரசியல்துறை அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது. அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;**

தமிழைப் பேசுகின்றவர்களும் வடக்குகிழக்கில் வாழ்பவர்களுமான சிறுபான்மையினரிடையே வேற்றுமைகளை உருவாக்குவதும் அச்சமூகங்களின் மத்தியிலே முரண்பாடுகளைத் தோற்றுவிப்பதும் பேரினவாதச் சக்திகளின் வழக்கமான சதிகளில் ஒன்றாகும். பெரும்பான்மையினரால் மறுக்கப்படுகின்ற உரிமைகளை மீட்டெடுப்பதற்காக வடக்குகிழக்கிலே வாழ்கின்ற தமிழ் பேசுவோர் கொடுத்த விலையும் அனுபவித்த துன்பங்களும் அநேகம். அந்தத் தியாகங்களைக் கொச்சைப் படுத்தவும் விடுதலைப் போராட்டத்தைப் பயங்கரவாதம் என்று திரிபு படுத்தவும் பெருமுயற்சி செய்கின்ற பேரினவாதிகளும் அவர்தம் அடிவருடிகளும் பின்னுகின்ற சதிவலையில் இனியும் சிறுபான்மைச் சமூகங்களாகிய நாம் சிக்கி விடக்கூடாது.

எமது போராட்டத்தைப் பலவீனப் படுத்துவதற்காக ஒரே மொழி பேசுகின்ற சகோதரரிடையே வேற்றுமையை விதைப்பது பேரினவாதச் சிந்தனையின் உத்திகளில் ஒன்று என்பதைக் கடந்த காலங்களில் நாம் நன்கு அனுபவித்திருக்கிறோம். அதிலிருந்து கற்றுக்கொண்டும் இருக்கிறோம்.

முதிர்ச்சியடைந்த மனோநிலையில் சிந்தித்துச் செயலாற்ற வேண்டிய இந்தக் கட்டத்தில் எவரும் உணர்ச்சிவசப்படுவதோ பின்னணிகளை ஆராயாமல் பதில் நடவடிக்கைகளில் இறங்குவதோ விவேகமல்ல என்பதை நாம் அனைவரும் அறிவோம். இளைஞர்களிடையே பதற்றத்தை உண்டாக்கக்கூடிய வதந்திகளையும் துண்டுப் பிரசுரங்களையும் உலவவிடுவதன் மூலம் கடந்து வந்த இருண்ட நாட்களை நோக்கி எமது சமூகங்களை மீண்டும் இட்டுச் செல்ல நினைக்கிறது பேரினவாதம். அவ்வாறான கொடிய விளைவுகளால் இலாபம் பெறுவது பேரினவாதமே தவிர வேறு யாரும் அல்ல என்பதை நாம் அனைவரும் உணரும் பக்குவம் பெறவேண்டும். ஒரே மொழியைப் பேசி ஒரே பிரதேசத்தில் வாழ்ந்து ஒரே விதமான தொழில்துறைகளுக்குள் அடையாளப்பட்டுக் கிடக்கும் நாம் பிரிந்து நிற்க வேண்டும் என்று காரணங்களைத் தேடுவதில் சில அரசியல் வாதிகள் இலாபமடையலாம். ஆனால் நமது எதிர்காலச் சந்ததிக்கு. நாம் பிணக்குகளை மட்டுமா விட்டுச்செல்லப் போகிறோம் என்பதை மூத்த தலைமுறையினர் சிந்தித்து ஆலோசனை தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறோம். சேர்த்து வைத்த உறவுகளைச் சிந்தவிடுவது எவருக்குமே நல்லதல்ல. நாம் அனைவரும் ஒன்றாகவே இருந்தாக வேண்டியவர் கள் என்பதை இளைய தலை முறைக்கு விளக்க வேண்டும் எனவும் வேண்டி நிற்கிறோம். காத்தான்குடியில் கடந்த இரண்டாம் திகதி நடந்த சம்பவத்தில் காயமடைந்து பின்பு மருத்துவமனையில் உயிரிழந்த சகோதரர் ஏ.எல்.எம் பளீலின் குடும்பத்தாருக்கு நாம் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிக்கிறோம்.

பேரினவாதத்தின் சதிக்கொலைகளில் நாம் இழந்துவிட்ட பல்லாயிரம் சிறுபான்மை உயிர்களோடு நேற்று முன்தினம் பளீலின் இழப்பும் ஒன்றாகிறது.

மிகவும் அநாகரிகமான இந்தச் செயலை வன்மையாகக் கண்டிக்கிறோம். போரா? சமாதானமா? என்ற கேள்வி தமிழ்பேசும் மக்களின் மத்தியிலே உச்சம் பெற்றுநிற்கும் இந்தக் கட்டத்தில் குழப்பத்தை ஏற்படுத்துவதற்காக இதுபோன்ற பெரும் சதிகளை பேரினவாதிகள் மென்மேலும் செய்யக்கூடும். அந்த வலைகளில் விழுந்து குழப்பங்களுக்கு ஒத்துழைக்க வேண்டாம் என அனைவரையும் உரிமையோடு கேட்டுக்கொள்கிறோம் என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சந்திரிகாவின் பாராளுமன்ற பிரவேசம்; அஸ்கிரிய பீடாதிபதி எதிர்ப்பு

(கொழும்பு)

முன்னைய சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க மீண்டும் பாராளுமன்றத்திற்குள் நுழைவதற்கு தற்பொழுது முயற்சிகளை மேற்கொண்டு வருவதை அஸ்கிரிய பீடாதிபதி வன்மையாகக் கண்டித்துள்ளதுடன் கீழ்த்தரமான செயல் எனக் கூறியுள்ளார்.

முன்னைய சனாதிபதி தமது பதவிக்காலம் முடிவடைந்து ஓய்வு பெற்று ஹொரகொல்ல வாசஸ்தலத்தில் தங்கியுள்ளார். அவர் ஒரு நிறைவேற்று அதிகாரம் கொண்ட சனாதிபதியாக கடமையாற்றியுள்ளார். ஆனால் மீண்டும் அவர் பாராளுமன்றம் வருவதற்கு முயற்சிகளை மேற்கொண்டுள்ளார். இது தான் முன்பு வகித்த சனாதிபதிப் பதவியை அவமரியாதைக் குள்ளாக்கும் செயல் என அஸ்கிரிய பீடாதிபதி உடுகம ஸ்ரீ புத்தரகித்த தேரர் குறிப்பிட்டுள்ளார்

பாராளுமன்ற அமைச்சர்களும் அவர்களின் நிரந்தர செயலாளர்களும் அஸ்கிரிய பீடாதிபதியைச் சந்தித்து ஆசீர்வாதம் பெற்ற பொழுது இக் கருத்தினை பீடாதிபதி அவர்களுக்கு கூறியுள்ளார். மற்றும் சந்திரிகா மூன்றாம் வகுப்பு பாராளுமன்ற கலரியில் அமர்வது ஒரு ராஜா கீழ் மட்ட ஆசனத்தில் அமர்வதற்குசமம் என அவர் கூறியுள்ளார்.

# யாழ். தாக்குதல்களுக்கு ஜே.வி.பி கண்டனம்

யாழ்ப்பாணத்தில் சிறிலங்கா இராணுவம் மீதான தாக்குதல்களுக்கு ஜே.வி.பி.கண்டனம் தெரிவித்துள்ளது.

ஜே.வி.பி. வெளியீட்டுள்ள அறிக்கையில், யாழ்ப்பாணத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள தாக்குதல்களுக்கு எமது கண்டனத்தைத் தெரிவிக்கின்றோம். விடுதலைப்புலிகளினால் மீண்டும் தாக்குதல்கள் மேற்கொள்ளப்படுவதைத் தவிர்க்க அரசாங்கம் உறுதியான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்

புலிகளின் தாக்குதல்களுக்கு எதிராக தேசிய மற்றும் சர்வதேச சக்திகள் ஒருபொதுவான கருத்திற்கு வரவேண்டும்.

போலி சமாதான செயற்பாடுகளுக்குள் அனைத்து விடயங்களையும் உள்ளடக்கும் கொள்கைக்கு பதிலாக மகிந்த ராஜபக்ஷவினது அரசாங்கம் தேசிய பாதுகாப்பிற்காக எடுக்க வேண்டிய நடவடிக்கைகளுடன்,நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்துவேன் என்ற தன்துகொள்கைகளுக்கு அமைய செயற்படவேண்டும் என அதில் கேட்கப்பட்டுள்ளது.

## ஊ.சே. நிதிக்கான வட்டிவீதம் குறைப்பு

(கொழும்பு)

ஊழியர் சேமலாப நிதிக்கு 2005ஆம் ஆண்டு வட்டி விகிதம் 9% குறைக்கப்பட்டுள்ளது. 2006ஆம் ஆண்டு தொடக்கம் 9.50% அதிகரிக்கப்படும் என சேமலாப நிதி பிரிவு தெரிவித்துள்ளது. சேமலாபநிதி வட்டி விகிதம் குறைவதற்கு வங்கி வட்டி வீதம் குறைந்துள்ளதே காரணமென சேமலாப நிதி [illegible]ணைக்களம் தெரிவித்துள்ளது.

## பில்கேட்ஸ் சந்திப்பு

(கொழும்பு)

உலகின் முதல்நிலை பணக்காரரான பில்கேட்ஸ் எதிர்வரும் 9 ஆம் திகதி மிகக்குறுகிய பயணம் ஒன்றை சிறிலங்காவில் மேற்கொள்ளவுள்ளார். இதன்போது அவர் சிறிலங்கா சனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை சந்திக்கவுள்ளார்.பில் கேட்ஸின் சொந்த வானூர்தி எரிபொருள் நிரப்புவதற்காக கட்டு நாயக் கவில் தரிக்கும் நேரத்திலேயே இந்த சந்திப்பு நிகழவுள்ளது. (32)

# இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதி வன்முறைகளுக்கு யார் பொறுப்பு என்பதில் குழப்பம் நீடிக்கிறது

## சர்வதேச மன்னிப்புச் சபை ஆய்வறிக்கை

இலங்கையில் சிறிலங்கா இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் தொடரும் அதிக வன்முறைகளுக்கு யார் பொறுப்பு என்பதில் குழப்பமே நீடிக்கிறது என்று சர்வதேச மன்னிப்புச் சபையின் ஆய்வறிக்கை தெரிவிக்கிறது.

சர்வதேச மன்னிப்புச் சபையின் செயலாளர் நாயகம் ஐரெனிகான் இலங்கையில் நான்கு நாள் சுற்றுப்பயணம் மேற்கொண்டு மனித உரிமைகள் தொடர்பான நிலைமைகளை ஆய்வு செய்தார். இந்தப் பயணத்தின் முடிவில் சர்வதேச மன்னிப்புச் சபை நேற்று முன்தினம் திங்கட்கிழமை வெளியிட்ட ஆய்வறிக்கையில்;

சிறிலங்கா அரசாங்கமும் தமிழீழ விடுதலைப்புலிகளும் வடக்கு-கிழக்கில் அதிகரித்து வரும் வன்முறைகளை மற்றும் உரிமை மீறல்களை உடனடியாக நிறுத்த வேண்டும்.

இருதரப்பிலும் மனித உரிமைகள் என்பது அரசியல் ஆயுதமாகப் பயன்படுத்தப்பட்டு வருகிறது. மனித உரிமை மீறல்கள் தொடர்பில் இருதரப்பினரும் ஒருவரை ஒருவர் குற்றம்சாட்டி வருகின்றனர். கடந்த ஆண்டினது கொலைகள், கடத்தல்கள், சித்திரவதைகளைச் சிறிதேனும் குறைக்க வேண்டும்.

நாளாந்தம் நடாத்தப்படுகிற தாக்குதல்களில் மக்கள் கொல்லப் படுகிறார்கள். மக்களை இலக்கு வைத்து நடைபெறும் தாக்குதல்கள் படுகொலைகள் வடபகுதியிலும் பரவி அபாய சூழ்நிலையை அறிவித்துள்ளன.

படுகொலைகள், இனப்பாகுபாடு ஆகியவை தொடர்பாக முஸ்லிம்கள் கவலைப்படுகின்றனர்.

விடுதலைப்புலிகள் தொடர்பில் சிங்களவர்கள் அச்சப்படுகின்றனர் சிறிலங்கா அரசாங்கம் தொடர்பில் தமிழ் மக்கள் அச்சப்படுகின்றனர். இருவரது தொடர்பாகவும் முஸ்லிம் மக்கள் அச்சப்படுகின்றார்கள். அனைத்து இன மக்களும் அச்சத்தில் உள்ளனர்.

ஆயிரக்கணக்கான மக்கள் ஆழிப்பேரலையால் இடப்பெயர்வுக்குள்ளாகி இருப்பதும் மோசமான நிலைமைகளுக்கு ஒரு காரணம்.

அதிகரித்து வரும் வன்முறைகளைப் பரவவிடாது தடுக்குமாறு சிறிலங்கா சனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுடனான சந்திப்பில் நாம் வேண்டுகோள் விடுத்துள்ளோம்.

சுயாதீன விசாரணைகளை மேற்கொள்ளும் வகையில் கண்காணிப்புக் குழு விடயங்களில் நெகிழ்வுப் போக்கைக் கடைபிடிக்குமாறும் சிறிலங்கா அரசாங்கத்தை நாம் கேட்டுக்கொண்டோம்.

மனித உரிமை மீறல்கள் குறிப்பிடத்தக்க அளவு குறைக்கப்படாமல் அமைதி முயற்சிகள் எட்டப்பட முடியாது.

சிறிலங்கா படையினருக்கு எதிரான அனைத்து குற்றச்சாட்டுகள் தொடர்பாகவும் தாம் விசாரணைகளை மேற்கொள்ள உள்ளதாக சிறிலஙகா சனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்திருந்தார். இதனை நாம் வரவேற்கிற அதே நேரத்தில் இதில் உறுதியான நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும் என்றும் வலியுறுத்துகின்றோம்.

சிறிலங்கா இராணுவத்தின் கட்டுப்பாட்டு பகுதிகளில்தான் குறிப்பிடத்தகுந்த அளவிலான வன்முறைகள் மற்றும் படுகொலைகள் நடைபெறுகின்றன.

இருந்தபோதும் இந்த சம்பவங்களுக்குப் பின்னணியில் யார் உள்ளார்கள் என்பதில் குழப்பம் உள்ளது.

இந்தச் சம்பவங்கள் தொடர்பான விசாரணைகளுக்கும் பாதுகாப்புக்கும் அரசாங்கமே பொறுப்பு என்பதில் எதுவித சந்தேகமும் இல்லை என அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சர்வதேச மன்னிப்புச் சபையின் செயலாளர் நாயகம் ஐரெனிகானுடன் டென்மார்க் பிரதிநிதி லார்ஸ் நோர்மன் ஜோர்கென்சென், ஆசிய பிரதிநிதி பூர்ண சென் மற்றும் லிஸ் ரோஸ்வெல், கவிதா மேனன் ஆகியோர் இலங்கை நிலைமைகளை ஆய்வு செய்தனர்.

சிறிலங்கா சனாதிபதி மகிந்த ராஜபக்ஷ வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவிர, முன்னாள் பிரதமரும் எதிர்க்கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க, கொழும்பு சிறிலங்கா கொள்கை வகுப்பாளர்கள், மனித உரிமைச் செயற்பாட்டாளர்கள். யாழ்ப்பாணம் மற்றும் மட்டக்களப்பு மக்கள் அமைப்புகள் ஆகியோரை இக்குழுவினர் சந்தித்தனர்.

யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சிப் பகுதிகளுக்கும் இக்குழு சென்றது.

அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் நீதி நிர்வாகத்துறைப்பொறுப்பாளர் பரா, காவல் துறைப்பொறுப்பாளர் பா.நடேசன் மற்றும் வடக்கு- கிழக்கு மனித உரிமைச்செயலகத்தின் உறுப்பினர்கள் ஆகியோரையும் சர்வதேச மன்னிப்புச் சபைக் குழு சந்தித்தது. தமிழீழ விடுதலைப் புலிகளின் சிறைச்சாலைகளையும் சர்வதேச மன்னிப்புச் சபைக்குழு பார்வையிட்டமை குறிப்பிடத்தக்கது.

# உயர் பதவிகளை வழங்க ஜா.ஹெல உறுமய நிர்ப்பந்தம்

இலங்கை அரசாங்கத்தின் உயர் பதவிகளை தமக்கு வழங்குமாறு ஜாதிக ஹெல உறுமயவினர் சனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் வலியுறுத்தி வருவதாக தெரியவருகின்றது.

ஏற்கனவே ஜாதிக ஹெல உறுமயவின் அழுத்தம் காரணமாகவே கொட்டகதெனிய பாதுகாப்பு அமைச்சின் சிரேஷ்ட ஆலோசகராக நியமிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

தற்போது இலங்கை வங்கியின் ஆளுனராக ஜாதிக ஹெல உறுமயவின் சட்ட ஆலோசகரான உதய கம்மன்பிலவையும் மக்கள்வங்கியின் ஆளுனராக கிரிவன்தெனியவையும் நியமிக்க வேண்டும் என்று ஜாதிக ஹெல உறுமய வலியுறுத்தி வருவதாக குறிப்பிடப்படுகின்றது.

# ஐ.நா. ம. உ. குழுவின் பரிந்துரையை எவ்வாறு ஏற்றுக்கொள்வது?

-சிறிலங்கா வின் பிரதம நீதியரசர் கேள்வி

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் குழுவின் பரிந்துரைகள் இலங்கையின் அரசியல் அமைப்புடன் இணங்காது போனால் அதனை எவ்வாறு ஏற்றுக்கொள்வது என பிரதம நீதியரசர் சரத் என் சில்வா நேற்று முன்தினம் உயர்நீதிமன்றத்தில் கேள்வி எழுப்பினார்.

இராணுவ முகாம் ஒன்றின் தாக்குதல் தொடர்பில் 2000 ஆம் ஆண்டு கொழும்பில் மேல் நீதிமன்றத்தால் நல்லரத்தினம் சிங்கராஜா என்பவருக்கு 20 வருட சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

எனினும் இதற்கு எதிராக அவர் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் குழுவில் தாக்கல் செய்த மனுவின் அடிப்படையில் அவரை விடுதலை செய்யுமாறு ஐக்கியநாடுகள் மனித உரிமைகள் குழு பரிந்துரை செய்துள்ளது.

இந்த நிலையில் வரலாற்றில் முதற் தடவையாக ஐக்கிய நாடுகளின் பரிந்துரை தொடர்பில் உயர் நீதிமன்றம் ஆராய்ந்தது.

இதன் போது மனுதாரர் சார்பில் ஆஜரான சட்டத்தரணி இலங்கை ஐக்கிய நாடுகள் சபையின் நியாயங்களுக்கு உட்பட்டுள்ளமையால் அதன் பரிந்துரைகளை ஏற்று சிங்கராஜாவை விடுதலை செய்யவேண்டும் என வாதிட்டார்.

இதற்கும் பதில் வாதத்தை முன் வைத்து பிரதி சொலிஸிட்டர் ஜெனரல் தமதுதீர்ப்பை மீளமைக்க உயர்நீதிமன்றத்திற்கு அதிகாரம் இல்லை என சுட்டிக்காட்டினார்.

இந்த நிலையில் விசாரணை எதிர்வரும் சனவரி மாதம் 25ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

## 07 ஆம் ஆண்டு கண்ணீரஞ்சலி



அன்னையின் மடியில்- 25 - 11 - 1977

அரக்கன் பிடியில்- 25 - 11 - 1998

கிளி. ஸ்கந்தபுரம் 143/A இலக்கத்தில் வசிக்கும்

**சத்தியநாதன் தமிழ்க்குமரன்**

(மொறட்டுவ பல்கலைக்கழக பொறியியல் பீட (N.D.T) முதலாமாண்டு மாணவன்)

நினைவு நாள் 8.12.2005 வியாழக்கிழமை

எங்கள் குடும்ப ஒளிவிளக்கே குமரா...
பதினாறும் பெற்று பெருவாழ்வு வாழ வேண்டிய மகனே..
பட்டப்படிப்பு முடியும் முன் பகைவர் கண்பட்டதோ...
உன் பிறந்த நாளுக்கா காலனும் காத்திருந்தான்?
முள்ளுக்குள் றோசா மொட்டுப்போல் தோன்றினாய்
மொட்டு விரிந்து அழகு தரும்முன் அரக்கர்
பறித்துவிட்டார்கள் பதறித்துடிக்கின்றோம்.

உன் பரிசுத்தமான ஆத்மா சாந்தி வேண்டி ஸ்கந்தபுர விநாயகர் ஆலயத்தில் பூசை நடைபெறும். உற்றார், உறவினர், நண்பர்கள் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

ஓம் சாந்தி!சாந்தி!சாந்தி!!!

ச.சத்தியநாதன்,
இல.143A ஸ்கந்தபுரம்,
கிளிநொச்சி.

உன்பிரிவால் கலங்கும்,
அம்மா,அப்பா,
சகோதரர்கள்,மைத்துனர்கள்,
அண்ணி,பிள்ளைகள்.

(சி.13487)

வடக்கு-கிழக்கு மாகாணசபை
சுனாமியால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களுக்கான மீள் கட்டுமானத் திட்டம் (TAARP)
ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதிப்படுத்தப்பட்டது.
"ஆ.அ.வ" கொடை இல.00006-SRI(SF)

# யாழ்.மாவட்ட நிர்மாண வேலைகளுக்கான கேள்வி அறிவித்தல் இல:02

01. சுனாமியால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களுக்கான மீள் கட்டுமானத்திட்டத்தின் (TAARP) ஆகு செலவு சார்பாக பலதரப்பட்ட நாணயங்களில் ஆசிய அபிவிருத்தி வங்கியிலிருந்து ("ஆ.அ.வ") கொடையொன்றை இலங்கை அரசாங்கம் பெற்றுள்ளதுடன், கீழேயுள்ள அட்டவணையில் விபரிக்கப் பட்டுள்ள நிர்மாண வேலைகளுக்கான ஒப்பந்தங்களின் கீழ் தகுதிவாய்ந்த கொடுப்பனவுகளுக்கு இக்கடனின் வரும்படிகளின் பகுதி பிரயோகிக்கப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

02. இதன் பின்னகத்துத் தொழில் தருநராகக் குறிப்பிடப்படும் (NECORD) கருத்திட்டத்தின் பணிப்பாளருக்காக யாழ்ப்பாண மாவட்ட செயலாளர் பின்வரும் ஒப்பந்தங்களுக்குத் தகுதி வாய்ந்த கேள்வி கோருவோரிடமிருந்து பொறிவைக்கப்பட்ட கேள்விகளைத் தற்போது கோருகின்றார்.

| இல | ஒப்பந்த இனங்காட்டல் இல | ஒப்பந்தத்தின் பெயர் | ஆகக்குறைந்த இக்ராட் பதிவு | கூறுவிலை பிணைப் பணம் (ரூபா) |
|---|---|---|---|---|
| 01 | JF/TAARP/CD/01 Package I | வடமராட்சியில் பொலி கண்டி கிராம அபிவிருத்திச் செயலகம் மீளமைத்தல். | M7 (கட்டடங்கள்) | 30,200,00 |
| 02 | JF/TAARP/CD/01 Package II | வடமராட்சியில் கெருடாவில் கிராம அபிவிருத்திச் செயலகம் மீளமைத்தல். | M7 (கட்டடங்கள்) | 30,200,00 |
| 03 | JF/TAARP/RD/01 | மருதங்கேணி ஆழியவளை 'C'வகுப்பு வீதி (4கி.மீ)புனரமைத்தல் | M5 (பெருந்தெருக்கள்) | 180,500,00 |

03 பின்வரும் தகுதிகளைக் கொண்டுள்ளதாக விளங்கும் உறுதியான நோக்கமுடைய சகல ஒப்பந்தக்காரர்களுக்கும் கூறுவிலையிடல் திறந்துள்ளது.

i) நிர்மாணப்பயிற்சி, அபிவிருத்தி நிறுவனத்தினால் (ICTAD) விருத்தி செய்யப்பட்ட தேசிய நிர்மாண ஒப்பந்தகாரர் பதிவு, தரப்படுதல் திட்டத்தின் கீழ் மேற்படி அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட தரமொனறில் ஒப்பந்தக்காரர் பதிவு செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

ii) இலங்கை தேசிய நிர்மாண ஒப்பந்தக்காரர் சங்கத்தின் (இ.தே.நி.ஒ.ச) உறுப்பினராக ("இக்ராட்" டுடன் M7 இற்கு மேல் பதிவு செய்தவர்களுக்கு மட்டும்) இருத்தல் வேண்டும்.

iii) கடந்த ஐந்து வருடங்களினுள் ஆகக்குறைந்தது இரு ஒத்த தன்மையிலான ஒப்பந்தங்களைத் திருப்திகரமாக முடிவுறுத்தியுள்ளதுடன் கடந்த ஐந்து வருடங்களின் போது மேற்கொள்ளப்பட்ட வேலைகளில் திருப்திகரமான சாதனையைக் கொண்டிருத்தல் வேண்டும். இது வாடிக்கையாளர்களிடமிருந்து அத்துடன்/அல்லது உசாவலர்களிட மிருந்து சான்றுப்பத்திரங்களின் மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும். இக்காலத்தின் போது மேற்கொள்ளப்பட்ட சகல வேலைகளினதும் முழு நிரலொன்று வழங்கப்பட வேண்டும்.

iv) "இக்ராட்" வழிகாட்டல் முறைகளின் பிரகாரம் கணக்கிடப்பட்டவாறு வேலையைப் பொறுப்பேற்பவர் போதியளவு ஒப்பந்த ஆற்றலளவைக் கொண்டிருக்க வேண்டும்.

v) மோசடியான அல்லது வஞ்சனையான நடவடிக்கைகளுக்கு அல்லது திருப்திகரமற்ற வேலை செய்ததனால் தகுதியற்றவர் என்ற பிரகடனத்தின் கீழ் விளங்கக் கூடாது.

vi) ஒப்பந்த ஆவணங்கள் வழுங்கப்படுவதற்கு முன் ஒப்பந்தகாரரின் புதுப்பிக்கப்பட்ட பதிவுப் புத்தகத்தைச் சமர்ப்பிக்கக் கூடியவராக இருத்தல் வேண்டும்.

04 மேலே உள்ள அட்டணையில் குறிப்பிட்டுள்ள ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட ஒப்பந் தங்களுக்கு ஒப்பந்தக்காரர்கள் கேள்வி கோர முடியும். ஏதாவது ஒப்பந்தக்காரருக்கு அனுமதிக்கப்படும் ஆகக்கூடுதலான ஒப்பந்தங்களின் எண்ணிக்கை தற்போது மேற் கொள்ளும் NECORD வேலைகள் அடங்கலாக மூன்றுக்கு மேற்படலாகாது.

05 தகுதி வாய்ந்த கேள்வி கோருவோர் மேலதிக விபரங்களை மாவட்ட பிரதித் திட்டப்பணிப் பாளர் அலுவலகம், NECORD , கச்சேரி, யாழ்ப்பாணத்தில் பெற்றுக்கொள்ளலாம். தொலை பேசி-021-2223625, தொலைநகல்-021-2225163, மின்னஞ்சல்- necordjf@sltnet.lk

06 ஒப்பந்த ஆவணங்கள் டிசம்பா மாதம் 07ஆம் திகதி முதல் டிசம்பர் 21ஆம் திகதி வரை முற்பகல் 9.30 மணியிலிருந்து பிற்பகல் 3.00 மணிவரை வேலை நாட்களில் மேற்படி அலுவலகத் திலிருந்து மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா 1000/= செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.

07 இரு பொறிவைக்கப்பட்ட உறைகளில் புறம்பாகச் சமர்ப்பிக்கப்பட்டுள்ள விலையிடப்பட்ட கேள்விகளையும, கேள்வியிடுவோரின் முன் தகுதிக்கு அவசியமான ஆவணத்தையும் கேள்வி கள் கொண்ருக்க வேண்டும் என்பதுடன் இது தொடர்பாக பந்தி 8 இல் குறிப்பிடப்பட் டுள்ள இடம்,திகதி மற்றும் நேரம் ஆகியவற்றிக்கு ஏற்ப ஒப்படைக்கப்படவேண்டும்.

08 அந்ததந்த வேலைகளுக்குரிய ஒப்பந்தப்பிணைமுறிகளுடன் பொறிவைத்த கேள்விகள் "தலைவர், மாவட்டக்கேள்விச்சபை, NECORD ,கச்சேரி,யாழ்ப்பாணம் " இற்கு டிசம்பர் மாதம் 28ஆம் திகதி பி.ப.3.00 மணிக்கு முன்பாகக் கிடைக்க வேண்டும். உடனடியாக கேள்விகள் திறக்கப்படும்.கேள்வி கோருவோர் அல்லது அவர்களது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமுகமளிக்கலாம்.

09 ஒப்பந்தக்காரருக்குக் கேள்வி கோருவதற்கு வேண்டிய விளக்கத்தை அளிப்பதற்கான கூட்டமொன்று கச்சேரியில் டிசம்பர் மாதம் 20 ஆம் திகதி பிற்பகல் 2.00 மணிக்கு நடை பெறும்.

10 கேள்விகள் தயாரிப்புக்கு அல்லது ஒப்படைப்புக்கு கேள்வி கோருவோருக்கு ஏற்படும் ஆகு செலவுகளுக்கு அல்லது செலவீனங்களுக்குத் தொழில்தருநர் பொறுப்பாக மாட்டார்.

க.கணேஸ்,
தலைவர்,மாவட்டக்கேள்விச்சபை,
அரசாங்க அதிபர்,
யாழ்ப்பாண மாவட்டம்.

(சி.13436)

# மன்மோகன்சிங்-விளாடிமிர் புட்டின் சந்திப்பு; மூன்று ஒப்பந்தங்கள் கைச்சாத்து

(புதுடில்லி)

ரஷ்யாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள பிரதமர் மன்மோகன்சிங் நேற்று முன்தினம் அந்நாட்டு அதிபர் விளாடிமிர் புட்டினைச் சந்தித்துப் பேசினார். கிரம்ளின் மாளிகையில் இந்தச் சந்திப்பு நடைபெற்றது.

முதலில் இருவரும் தனியாக 30 நிமிடங்கள் பேச்சுவார்த்தை நடத்தினார்கள். பின்னர் இரு நாட்டுத்தலைவர்களும் தங்களது நாட்டுக் குழுவினருடன் சேர்ந்து ஒன்றரை மணி நேரம் பேச்சுவார்த்தை நடத்தினர். பேச்சு வார்த்தையின் முடிவில் இரு தரப்பிலும் மூன்று ஒப்பந்தங்கள் கையெழுத்தாகின.

பாதுகாப்புத்துறையில் அறிவு சார்ந்த தொழில் நுட்பத்தைப் பகிர்ந்து கொள்வது செயற்கைக்கோள் மூலம் கப்பல்படை பாதுகாப்பில் தொழில் நுட்பத்தைப் பகிர்ந்து கொள்வது மற்றும் சூரிய புவியியல் தொடர்பான மூன்று ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டன.

முன்னதாக மன்மோகன்சிங்கும், புட்டினும் தனிமையில் பேச்சுவார்த்தை நடத்தியபோது இரு நாடுகளின் உறவைப் பலப்படுத்துவது சர்வதேச செயற்பாடுகள், தீவிரவாதத்தை ஒழித்துக் கட்டுவது உட்பட பல்வேறு விடயங்கள் பேச்சுவார்த்தையில் இடம் பெற்றிருந்ததாகக் கூறப்படுகிறது.

பின்னர் இருவரும் நிருபர்களிடம் பேசுகையில், இந்தியா-ரஷ்யா உறவில் எதிர்பார்க்காத அளவு முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாகவும், இன்னும் இந்த உறவை மேம்படுத்த உறுதி கொண்டுள்ளதாகவும் தெரிவித்தனர்.

தீவிரவாதம் என்ற பெயரில் அப்பாவி மக்கள் படுகொலை செய்யப் படுவது அநியாயம். இனிமேலும் தீவிரவாதத்தைப் பொறுத்துக்கொள்ள முடியாது. தீவிரவாதிகள் அரசியல் ரீதியாகவும் கொள்கை ரீதியாகவும் தனிமைப்படுத்தப்பட வேண்டும் என்றும் அவர்கள் கூறினார்கள்.

ரஷ்ய ஒத்துழைப்புடன் நிர்மாணிக்கப்பட்டு வரும் கூடங்குளம் அணுமின் நிலையம் வருகிற 2007-2008 ஆம் ஆண்டில் தனது உற்பத்தியைத் தொடங்கும் என்றும் தலா 1000 மெகாவாட் வீதம் இரண்டு ஊர்களில் 2000 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்யப்படும் என்றும் பிரதமர் மன்மோகன்சிங் கூறினார்.

அதிபர் புட்டினை இந்தியாவுக்கு வருமாறு தான் அழைப்பு விடுத்ததாகவும், அதை அவர் ஏற்றுக்கொண்டதாகவும் மன்மோகன் சிங் தெரிவித்தார்.

# தமிழ்நாட்டில் மழைக்கு இதுவரை 351 பேர் பலி; சென்னையில் இரண்டு நாட்களில் 16 பேர் பலி

(சென்னை)

தமிழ்நாட்டில் மழை காரணமாக ஏற்பட்ட வெள்ளப்பெருக்கில் சிக்கி இதுவரை 351 பேர் பலியாகியுள்ளனர். சென்னையில் மட்டும் கடந்த இரண்டு நாட்களில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கினால் 16 பேர் பலியாகியுள்ளனர்.

அதிகளவான மழை பொழிவை அடுத்து தமிழ்நாட்டில் உள்ள ஏரிகள் உடைப்பெடுக்கும் அச்சம் காரணமாக திறந்து விடப்பட்டுள்ளன. இதனால் வெள்ளநீர் கிராமங்களுக்குள் புகுந்துள்ளது. இருநூறுக்கும் மேற்பட்ட கிராமங்கள் வெள்ளத்தால் சூழப்பட்டு தனித்தீவுகளாக்கப்பட்டுள்ளன.

வெள்ளத்தில் சிக்குண்டவர்கள் மீட்கப்பட்டு வருகின்றனர். மழை பெய்து ஓய்ந்த பின்னரும் ஏரிகள் திறந்து விடப்பட்டதாலேயே இந்த வெள்ள அபாயம் ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.





தமிழகத்தில் வெள்ளப்பெருக்கினால் பொலிஸ் நிலையம் ஒன்று நீரில் மூழ்கி இருப்பதையும் கிராமமே நீரால் சூழப்பட்டிருப்பதையும் படங்களில் காணலாம்.


வடக்கு-கிழக்கு மாகாணசபை
வடக்கு-கிழக்கு சமுதாய மீளமைப்பு அபிவிருத்தித்திட்டம் II (நிகொட் II)
ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதிப்படுத்தப்பட்டது.
"ஆ.அ.வ" கடன் இல.2168-SRI(SF)
"ஆ.அ.வ" கொடை இல.00007-SRI(SF)

## யாழ்.மாவட்ட நிர்மாண வேலைகளுக்கான கேள்வி அறிவித்தல் இல:02

01. வடக்கு-கிழக்கு சமுதாய மீளமைப்பு அபிவிருத்தித்திட்டத்தின் (NECORD II) ஆகுசெலவு சார்பாக பலதரப்பட்ட நாணயங்களில் ஆசிய அபிவிருத்தி வங்கியிலிருந்து ("ஆ.அ.வ") கடனொன்றை இலங்கை அரசாங்கம் பெற்றுள்ளதுடன் கீழேயுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள நிர்மாண வேலைகளுக்கான ஒப்பந்தங்களின் கீழ் தகுதி வாய்ந்த கொடுப்பனவுகளுக்கு இக்கடனின் வரும்படிகளின் பகுதி பிரயோகிக்கப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

02. இதன் பின்னகத்துத் தொழில் தருநராகக் குறிப்பிடப்படும் NECORD கருத்திட்டத்தின் பணிப்பாளருக்காக யாழ்ப்பாண மாவட்ட செயலாளர் பின்வரும் ஒப்பந்தங்களுக்குத் தகுதி வாய்ந்த கேள்வி கோருவோரிடமிருந்து பொறிவைக்கப்பட்ட கேள்விகளை தற்போது கோருகின்றார்.

| இல | ஒப்பந்த இனங்காட்டல் இல. | ஒப்பந்தத்தின் பெயர் | ஆகக்குறைந்த இக்ராட் பதிவு | கூறுவிலை பிணைப் பணம் (ரூபா) |
|---|---|---|---|---|
| 01 | JF/NECORD-II/AG/01 | கரவெட்டியில் கமநலசேவை நிலையம் மீளமைத்தல். | M6 (கட்டடங்கள்) | 65,900/= |
| 02 | JF/NECORD-II/AG/02 | சண்டிலிப்பாய் கமநலசேவை நிலையம் மீளமைத்தல். | M6 (கட்டடங்கள்) | 65,900/= |
| 03 | JF/NECORD-II/RD/01 | வேலணையில் அல்லைப்பிடி-மண்கும்பான் வீதி புனரமைத்தல் | M6 (பெருந்தெருக்கள்) | 72,500/= |
| 04 | JF/NECORD-II/RD/02 | நெடுந்தீவுப்பிரதேசத்தில் 3. 8 கி. மீ நீளமான வீதி மீளமைத்தல் | M7 (பெருந்தெருக்கள்) | 65,200/= |
| 05 | JF/NECORD-II/RD/03 | ஊர்காவற்துறை சென். செபஸ்தியான் கண்ணகை அம்மன் வீதிபுனரமைத்தல் | M7 (பெருந்தெருக்கள்) | 39,500/= |
| 06 | JF/NECORD-II/RD/04 | வேலணையில் சுருவில்-வேலணை மீன்பிடி வீதி புனரமைத்தல் | M6 (பெருந்தெருக்கள்) | 50,500/= |
| 07 | JF/NECORD-II/ED/02 | கச்சாய் அ.த.க. பாடசாலையில் விஞ்ஞான ஆய்வுகூடம் அடங்கலாக 110'x25' அளவுடைய இருமாடி வகுப்பறைக் கட்டடம் மீளமைத்தல் | M6 (கட்டடங்கள்) | 70,500/= |
| 08 | JF/NECORD-II/ED/07 | சுண்டிக்குளி மகளிர் கல்லூரியில் 95'x30' அளவுடைய இருமாடி வகுப்பறைக் கட்டடம் மீளமைத்தல்-நிலை I | M6 (கட்டடங்கள்) | 62,200/= |
| 09 | JF/NECORD-II/LS/01 | யாழ்ப்பாணத்தில் மிருக வைத்திய அலுவலகம் அமைத்தல் | M7 (கட்டடங்கள்) | 44,800/= |
| 10 | JF/NECORD-II/LD/03 | யாழ் மாவட்டச் செயலகத்தில் வாகன நிறுத்துமிடம் மீளமைத்தல் | M9 (கட்டடங்கள்) | 6,500/= |
| 11 | JF/NECORD-II/HS/03 | சாவகச்சேரி மாவட்ட வைத்திய சாலையில் வைத்திய அதிகாரி விடுதி மீளமைத்தல் | M5 (கட்டடங்கள்) | 126,600/= |

03 பின்வரும் தகுதிகளைக் கொண்டுள்ளதாக விளங்கும் உறுதியான நோக்கமுடைய சகல ஒப்பந்தக்காரர்களுக்கும் கூறுவிலையிடல் திறந்துள்ளது.

i) நிர்மாணப்பயிற்சி, அபிவிருத்தி நிறுவனத்தினால் ICTAD விருத்தி செய்யப்பட்ட தேசிய நிர்மாண ஒப்பந்தக்காரர் பதிவு, தரப்படுத்தல் திட்டத்தின் கீழ் மேற்படி அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட தரமொன்றில் ஒப்பந்தக்காரர் பதிவு செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

ii) இலங்கை தேசிய நிர்மாண ஒப்பந்தக்காரர் சங்கத்தின் (இ.தே.நி.ஒ.ச) உறுப்பினராக ("இக்ராட்"டுடன் M7 இற்கு மேல் பதிவு செய்தவர்களுக்கு மட்டும்) இருத்தல் வேண்டும்.

iii) கடந்த ஐந்து வருடங்களினுள் ஆகக்குறைந்தது இரு ஒத்த தன்மையிலான ஒப்பந்தங்களைத் திருப்திகரமாக முடிவுறுத்தியுள்ளதுடன் கடந்த ஐந்து வருடங்களின் போது மேற்கொள்ளப்பட்ட வேலைகளில் திருப்திகரமான சாதனையைக் கொண்டிருத்தல் வேண்டும். இது வாடிக்கையாளரிடமிருந்து அத்துடன்/அல்லது உசாவலர்களிடமிருந்து சான்றுப்பத்திரங்களின் மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும். இக்காலத்தின் போது மேற்கொள்ளப்பட்ட சகல வேலைகளினதும் முழு நிரலொன்று வழங்கப்படவேண்டும்.

iv) "இக்ராட்" வழிகாட்டல் முறைகளின் பிரகாரம் கணக்கிடப்பட்டவாறு வேலையைப் பொறுப்பேற்பவர் போதியளவு ஒப்பந்த ஆற்றலளவைக் கொண்டிருத்தல் வேண்டும்.

v) மோசடியான அல்லது வஞ்சனையான நடவடிக்கைகளுக்கு அல்லது திருப்திகரமற்ற வேலை செய்ததனால் தகுதியற்றவர் என்ற பிரகடனத்தின் கீழ் விளங்கக் கூடாது.

vi) ஒப்பந்த ஆவணங்கள் வழங்கப்படுவதற்கு முன் ஒப்பந்தகாரரின் புதுப்பிக்கப்பட்ட பதிவுப் புத்தகத்தைச் சமர்ப்பிக்கக் கூடியவராக இருத்தல் வேண்டும்.

04 மேலே உள்ள அட்டணையில் குறிப்பிட்டுள்ள ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட ஒப்பந்தங்களுக்கு ஒப்பந்தக்காரர்கள் கேள்வி கோர முடியும். ஏதாவது ஒப்பந்தக்காரருக்கு அனுமதிக்கப்படும் ஆகக்கூடுதலான ஒப்பந்தங்களின் எண்ணிக்கை தற்போது மேற்கொள்ளும் (NECORD) வேலைகள் அடங்கலாக மூன்றுக்கு மேற்படலாகாது.

05 தகுதி வாய்ந்த கேள்வி கோருவோர் மேலதிக விபரங்களை மாவட்ட பிரதித் திட்டப்பணிப்பாளர் அலுவலகம், NECORD, கச்சேரி, யாழ்ப்பாணத்தில் பெற்றுக்கொள்ளலாம். தொலை பேசி-021-2223625, தொலைநகல்-021-2225163, மின்னஞ்சல்- necordjf@sltnet.lk.

06 ஒப்பந்த ஆவணங்கள் மார்கழி மாதம் 07ஆம் திகதி முதல் 21ஆம் திகதி வரை முற்பகல் 9.30 மணியிலிருந்து பிற்பகல் 3.00 மணிவரை வேலை நாட்களில் மேற்படி அலுவலகத்திலிருந்து மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா 1000/= செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.

07 இரு பொறிவைக்கப்பட்ட உறைகளில் புறம்பாகச் சமர்ப்பிக்கப்பட்டுள்ள விலையிடப்பட்ட கேள்விகளையும், கேள்வியிடுவோரின் முன் தகுதிக்கு அவசியமான ஆவணத்தையும் கேள்விகள் கொண்டிருக்க வேண்டும் என்பதுடன் இது தொடர்பாக பந்தி 8 இல் குறிப்பிடப்பட்டுள்ள இடம்,திகதி மற்றும் நேரம் ஆகியவற்றிக்கு ஏற்ப ஒப்படைக்கப்படவேண்டும்.

08 அந்தந்த வேலைகளுக்குரிய ஒப்பந்தப்பிணைமுறிகளுடன் பொறிவைத்த கேள்விகள் "தலைவர், மாவட்டக்கேள்விச்சபை, NECORD ,கச்சேரி,யாழ்ப்பாணம்" இற்கு மார்கழி மாதம் 28ஆம் திகதி பி.ப.3.00 மணிக்கு முன்பாகக் கிடைக்க வேண்டும். உடனடியாக கேள்விகள் திறக்கப்படும்.கேள்வி கோருவோர் அல்லது அவர்களது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமுகமளிக்கலாம்.

09 ஒப்பந்தக்காரருக்குக் கேள்வி கோருவதற்கு வேண்டிய விளக்கத்தை அளிப்பதற்கான கூட்டமொன்று கச்சேரியில் மார்கழி மாதம் 20 ஆம் திகதி பிற்பகல் 2.00 மணிக்கு நடைபெறும்.

10 கேள்விகள் தயாரிப்புக்கு அல்லது ஒப்படைப்புக்கு கேள்வி கோருவோருக்கு ஏற்படும் ஆகு செலவுகளுக்கு அல்லது செலவீனங்களுக்குத் தொழில்தருநர் பொறுப்பாக மாட்டார்.

க.கணேஸ்,
தலைவர்,மாவட்டக்கேள்விச்சபை,
அரசாங்க அதிபர்,
யாழ்ப்பாண மாவட்டம்.

(சி.13435)

# நியூசிலாந்து சளைக்காது துடுப்பாட்டம் மூன்று ஓட்டத்தால் வெற்றி கைநழுவியது



அவுஸ்திரேலிய நியூசிலாந்து அணிகளுக்கிடையில் வெலிங்டனில் நடைபெற்ற பரபரப்பான இரண்டாவது ஒரு நாள் போட்டியில் அவுஸ்திரேலிய அணி இரண்டு ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற அவுஸ்திரேலியா முதலில் துடுப்பாட தீர்மானித்தது அணியின் மொத்த ஓட்டம் பத்தாக இருக்கும் போது முதலாவது விக்கெட்டை இழந்த அவுஸ்திரேலியா 101 ஓட்டத்துக்கு நான்கு விக்கெட்டுக்களை இழந்தது.

இந்த நிலையில் சைமன்ஸ் கிளாக் ஜோடி அபாரமாக ஆடி இமாலய ஓட்ட எண்ணிக்கையை நியூசிலாந்து அணிக்கு நிர்ணயித்தது.

சைமன்ஸ் அபாரமாக ஆடி எட்டு ஆறு ஓட்டம் 12 நான்கு ஓட்டம் அடங்கலாக 127 பந்துகளில் 156 ஓட்டங்களையும், கிளார்க் ஆட்டமிழக்காது 82 ஓட்டங்களையும் பெற்றனர்.

இதனால் அவ் அணி நிர்ணயிக்கப்பட்ட ஓவரில் ஐந்து விக்கெட்டுக்களை இழந்து 322 ஓட்டங்களை பெற்றது.

பந்து வீச்சில் மில்ஸ் இரண்டு விக்கெட்டுக்களையும், கெய்ன்ஸ், விக்டோரி தலா ஒவ்வொரு விக்கெட்டையும் கைப்பற்றினர். சவால் மிகு வெற்றி இலக்கை நோக்கி ஆடிய நியூசிலாந்து 49.5 ஓவரில் 320 ஓட்டங்களைப் பெற்று அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து மூன்று ஓட்டங்களால் வெற்றி வாய்ப்பைத் தவறவிட்டது.

துடுப்பாட்டத்தில் வின்சன்ட் 71, அஸ்ரல் 22, கெய்ன்ஸ் 60, ஓரம் 40, மக்குலம் 48 ஓட்டங்களை அதிகபட்சமாகப் பெற்றனர்.

பந்து வீச்சில் லீலிஸ் மூன்று விக்கெட்டுக்களையும் கொக் இரண்டு விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர். ஆட்டநாயகனாக அன்று சைமன்ஸ் தெரிவானார்.

மேற்படி வெற்றி மூலம் மூன்று போட்டி கொண்ட ஒரு நாள் தொடரை அவுஸ்திரேலியா 2-0 என்ற நிலையில் கைப்பற்றிக் கொண்டது.

## இந்திய மண்ணில் டெஸ்ட் தொடரை கைப்பற்றுவதே குறி



முரளிதரன்

இந்திய மண்ணில் இது வரை எட்டப்படாத டெஸ்ட் தொடர் வெற்றியை பெற்று கிண்ணத்தை கைப்பற்றுவதே எமது இலக்கு என சிறிலங்கா கிரிக்கெட் அணியின் சுழல்பந்து வீச்சாளர் முத்தையா முரளிதரன் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் நிறைவுபெற்ற முதலாவது டெஸ்ட் போட்டியில் முதல் இனிங்சில் இந்தியாவை 167 ஓட்டங்களுக்கு சுருட்டிய சிறிலங்கா 41ஓவரில் நான்கு விக்கெட்டுக்களை இழந்து 168 ஓட்டங் களைப் பெற்று ஆட்டத்தை நிறுத்தியது

இப்போட்டி நிறைவில் செய்தியாளர்களின் கேள்விக்கு பதிலளிக்கும் போதே முரளிதரன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.



ஊழலில் ஈடுபட்டார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் பொலிசாரால் கைது செய்யப்பட்ட சிம்பாப்வே கிரிக்கெட் அணியின் தலைவர் சிங்கோக்காவும், முகாமையாளர் ஏசியங் பவுட்டியையும் படத்தில் காணலாம்.

## நான் எந்த வீரருக்கும் 'மார்க்' போடவில்லை அப்படி எண்ணமும் இல்லை- கிரேக் சப்பல்



எனக்கும் கங்குலிக்கும் ஏற்பட்ட விவகாரத்தை நான் எப்போதோ மறந்து விட்டேன். அந்தப் பிரச்சினை சாதாரணமான. ஒன்றுதான். ஆனால் அதை ஊதிப் பெரிதாக்கி விட்டார்கள் நடந்தது ஒன்று வெளியே வந்தது ஒன்று என்பது போல ஆகிவிட்டது என இந்தியப் பயிற்சியாளர் கிரேக் சப்பல் தெரிவித்துள்ளார்.

கங்குலி மறுபடியும் அணிக்கு வந்திருக்கிறார். அணிக்கு அவரது தேவை எது என்பது அவருக்கு நன்றாகவே தெரியும்.பழைய விடயங்களை நான் மறந்து விட்டாலும் பழைய பாடங்களை நான் மறந்துவிடவில்லை

கங்குலியும், நானும் அவரவருக்கு ஒதுக்கப்பட்ட பணிகளை செய்கிறோம். அவர் இந்திய அணிக்காக விளையாட விரும்புகிறார். நான் இந்திய அணிக்கு சிறந்த பயிற்சியாளராக இருக்க விரும்புகிறேன். இந்தப் பணி சிறப்பாக இருக்க வேண்டும்.

இந்திய அணி முன்னணியில் செல்ல வேண்டும் என்பதுதான் எனது குறிக்கோள். கங்குலி அணியில் முக்கியமான நபர். எனவே அவர் எல்லா வகையிலும் சிறப்பாக செயற்படுவது அவசியம் ஆகும். ஓட்டம் சேர்ப்பது அல்லது விக்கெட் எடுப்பது மட்டும் அல்ல எல்லா நடைமுறைகளும் நன்றாக இருக்க வேண்டும்.

நான் எந்த வீரருக்கும் மார்க் போடவில்லை. அப்படி நடந்து ஒரு வீரரை வீழ்த்த வேண்டும் என்ற எண்ணமும் இல்லை. அணி முன்னேற்றத்துக்காக என் பணிகளைச் செய்கிறேன். எனது அனுபவங்களை வைத்து கட்டுப்பாடான பயிற்சி முறைகளை கையாள்கின்றேன்.

பயிற்சியாளர் பணி சாதாரணமானது அல்ல அது சவால் நிறைந்தது. தினமும் சவாலை எதிர் கொள்ள வேண்டும் பல தரப்பட்டவர்களும் பல விதமான சவால்களை உருவாக்குவார்கள்.

எந்த மாதிரி சவால் வரும் என்று கூடத் தெரியாது. அதை சந்திக்க வேண்டும். எனது பணி முறையாக நடக்கும் நல்ல நட்புறவுடனே இருப்பேன் என்றார்.

## பயிற்சி ஆட்டத்தில் தடுமாறுகிறது தென்னாபிரிக்கா



மேற்கு அவுஸ்திரேலியாவுக்கு எதிரான பயிற்சி கிரிக்கெட் போட்டியின் முதல் இனிங்சில் தென்னாபிரிக்க அணி 179 ஓட்டங்களுக்கு சுருண்டு பலோ-ஆன் ஆனது.

மேற்கு அவுஸ்திரேலியா [illegible] 391 ஓட்டத்தில் ஆட்டத்தை நிறுத்தியது.

சிமித் தலைமையிலான தென்னபிரிக்க அணி, அவுஸ்திரேலியாவுக்கு பயணம் செய்து விளையாடி வருகிறது. இவ்விரு அணிகளுக்கு இடையிலான மூன்று டெஸ்ட் கிரிக்கெட் போட்டி கொண்ட தொடரின் முதல் டெஸ்ட் போட்டி பேர்த்தில் வரும் 16 ஆம் திகதி தொடங்குகிறது. இந்த நிலையில் தென்னாபிரிக்கா மேற்கு அவுஸ்திரேலியா அணிகள் இடையிலான மூன்று நாள் கொ[illegible] பிற்சி ஆட்டம் பேர்த்தில் நடைபெற்று வருகின்றது. முதல் இன்னி[illegible]டிய மேற்கு அவுஸ்திரேலிய அணி முதல் நாள் ஆட்ட நேர முடிவில் ஐந்து விக்கெட் இழப்புக்கு 306 ஓட்டம் எடுத்து வலுவான நிலையில் இருந்தது. இந்நிலையில் இரண்டாவது நாள் ஆட்டம் நேற்று முன்தினம் நடந்தது. தொடர்ந்து ஆடிய மேற்கு அவுஸ்திரேலிய அணி எட்டு விக்கெட் இழப்புக்கு 391 ஓட்டம் எடுத்து ஆட்டத்தை நிறுத்திக் கொண்டது.

பின்னர் முதல் இனிங்சில் ஆடிய தென்னாபிரிக்க அணி அடுத்தடுத்து விக்கெட்டை பறிகொடுத்தது. இதனால் அந்த அணி 197 ஓட்டத்தில் சுருண்டு பாலோ- ஆன் ஆனது. அதிகபட்சமாக ருடால்ப் 43, வில்லியர்ஸ் 27,போயே26, கிப்ஸ்25, ஓட்டங்கள் எடுத்தனர். பாலோ-ஆன் ஆனதை தொடர்ந்து தென்னாபிரிக்க அணி இரண்டாவது இனிங்சில் தொடர்ந்து ஆடியது நேற்றைய ஆட்ட நேர முடிவில் அந்த அணி இரண்டு விக்கெட் இழப்புக்கு 25 ஓட்டங்கள் எடுத்திருந்தது.

## இந்திய- பாகிஸ்தான் கிரிக்கெட் தொடர் இரு அணிகளுக்குமே நெருக்கடியானது



வசீம் அக்ரம்

இந்திய-பாகிஸ்தான் கிரிக்கெட் தொடர் இரு அணிகளுக்குமே நெருக்கடியான ஒன்று. என்கிறார் முன்னாள் தலைவர் வசிம் அக்ரம். வரும் சனவரியில் பாகிஸ்தானில் இந்திய அணி சுற்றுப்பயணம் மேற்கொண்டு மூன்று டெஸ்ட்,ஐந்து ஒரு நாள் போட்டிகள் கொண்ட தொடரில் பங்கேற்கிறது இத் தொடர் பற்றி பாக். முன்னாள் தலைவர் வசிம் அக்ரம் தெரிவிக்கையில்:

இந்திய- பாகிஸ்தான் அணிகளுக்கிடையே டெஸ்ட் ஒருநாள் தொடர் இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை நடத்தப்பட வேண்டும் என்பது நல்ல முடிவு. ஒவ்வொரு ஆண்டும் நடத்தினால் ரசிகர்களுக்கு போட்டிகள் சலிப்பு அடைந்து விடும். அடுத்த ஆண்டு இரு அணிகளும் மீண்டும் முக்கியத்துவம் வாய்ந்த தொடரில் சந்திக்கவுள்ளன. இதில் யாருக்கு வெற்றி வாய்ப்பு என்பதை இப்போதே கணிக்க முடியாது.


இரு அணிகளுக்கும் சம வாய்ப்புள்ளது. ஆஷஸ் தொடரோடு இந்தத் தொடரை ஒப்பிடுவதை ஏற்க முடியாது. இந்திய-பாக்.தொடரில் கிடைக்கும் உணர்வுபூர்வமான மோதல், பதற்றம் இவைகள் எல்லாம் வேறு எங்குமே பார்க்க முடியாது.

இந்திய அணியிலிருந்து கங்குலியை நீக்க வேண்டும் என்பது தவறு. மோசமான நிலை காரணமாக அவதிப்படும் இவருக்கு வாய்ப்புகள் வழங்குவதில் தவறில்லை.சச்சினை பொறுத்தவரை உலகின் தலைசிறந்த துடுப்பாட்டவீரருள் அவரும் ஒருவர். கவாஸ்கரின் சாதனையை அவர் கண்டிப்பாக முறியடிப்பார். ஓய்வு பெறும் போது யாருமே முறியடிக்க முடியாத சில சாதனைகளை அவர் நிகழ்த்தலாம் இர்பான்பதானை சிலர் கபில்தேவுடன் ஒப்பிடுகிறார்கள். அது தவறு. உலகின் தலைசிறந்த சகலதுறை வீரர்களில் ஒருவரான அவரின் இடத்தை நெருங்க பதான் இன்னும் கடுமையாகப் போராட வேண்டும். இவரைப்போல துடிப்புடன் பந்து வீசும் சஹீர்கானுக்கு அணியில் மீண்டும் வாய்ப்பளிக்க வேண்டும்

இந்திய அணிக்கு பயிற்சி அளிப்பீர்களா என சிலர் கேட்கின்றனர். எந்த அணியாக இருந்தால் என்ன? கபில்தேவ் எனக்கு ஆலோசனைகள் எல்லாம் வழங்கியிருக்கிறார். சர்வதேச கிரிக்கெட் அரங்கிற்கு என்னால் முடிந்த சேவைகளைச் செய்ய தயாராக இருக்கிறேன்என்றார் அக்ரம்.



## சிந்தனைக்கு



எமது சுதந்திரத்தை நாமே போராடி வென்றெடுக்கும் மனோதிடமும், நம்பிக்கையும், உறுதிப்பாடும் எங்களிடம் உண்டு.

தமிழீழ தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை,கிளிநொச்சி. 08.12.2005

தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் natham23 ela@ yahoo.com

## சதிச் செயல்!

கிழக்கு மாகாணத்தில் தமிழ்- முஸ்லிம் மக்களிடையே பதற்ற நிலை உருவாக்கப்பட்டுள்ளது. தமிழ்மக்களும் முஸ்லிம் மக்களும் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். அம்பாறைமாவட்டம் அக்கரைப் பற்றில் இருந்து திருமலை மாவட்டம் தோப்பூர் வரையில் ஆங்காங்கு ஆள்கடத்தல்களும் படுகொலைச்சம்பவங்களும் இடம்பெற்றுள்ளன.

படுகொலைச்சம்பவங்களில் பொதுவில் பெருமளவு பாதிப்பிற்கு உள்ளாவது தமிழ் மக்களே. ஆனால், சிறிலங்கா அரச தரப்பின் பாரபட்சமான நடவடிக்கைகளும் பிரச்சாரங்களும் தமிழ் மக்களின் இழப்புக்களைப் புறந்தள்ளி முஸ்லிம் மக்கள் மட்டுமே பாதிப்பிற்கு உள்ளாவது போன்று ஒரு தோற்றப்பாட்டை வெளிப்படுத்தி விடுவது வழமையாகும்.

சரி இப் படுகொலைகளில் யார் அதிகளவில் பாதிக்கப்படுகின்றார்கள் என்பது ஒருபுறம் இருக்க முஸ்லிம் மக்கள் மீதான படுகொலைக்கு விடுதலைப்புலிகள் மீது குற்றச்சாட்டுக்களைச் சுமத்துவது எந்தவித ஆதாரமும் அற்றது. ஆனால், திட்டமிட்டு மேற்கொள்ளப்படும் இந்நடவடிக்கையால் சிறிலங்கா ஆட்சியாளரும் முஸ்லிம்களின் தலைவர்களாகத் தம்மைக் கூறிக்கொள்ளும் சிலரும் ஆதாயம் தேட முனைகின்றனர் என்பதே உண்மையாகும்.

கிழக்கில் தமிழ்மக்களுக்கும் முஸ்லிம் மக்களுக்கும் இடையில் நீண்ட காலமாக இருந்து வந்த அன்னியோன்னியமான உறவு கடந்த நூற்றாண்டின் பிற்பகுதியில் பாதிப்பிற்கு உள்ளானது என்பது வெளிப்படையானதொன்று. இதற்கு ஒருதரப்பின் மீது குற்றம் சுமத்துவது தவறாகும். அவ்வாறு ஒரு தரப்பினர் மீது குற்றம் சுமத்துவதாக இருப்பின் அவர்கள் நீதியைப் பேசத்தயாராக இல்லை என்பதே அர்த்தமாகும். அத்தகையவர்களுடன் பேசிப்பயனில்லை.

அதேவேளை 2002இல் சிறிலங்கா அரசாங்கத்திற்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் யுத்தநிறுத்த உடன்பாடு கைச்சாத்தாகிய பின்னர் தமிழ்- முஸ்லிம் உறவை மேம்படுத்துவதற்காக விடுதலைப்புலிகள் முனைப்புடன் செயற்பட்டதுண்டு. இருதரப்பினர் இடையே காணப்பட்ட பிரச்சினைகளைத் தீர்க்க புலிகள் நடவடிக்கைகளை மேற்கொண்டதுண்டு.

முஸ்லிம் மக்களுடன் பல சந்திப்புக்களை நடாத்தி அவர்களின் கோரிக்கைகளைக் கேட்டறிந்து அவற்றில் தீர்வு எட்டக் கூடியவற்றிற்குத் தீர்வையும் கண்டுள்ளனர். இது முஸ்லிம் மக்களில் பலருக்குத் தெரிந்த உண்மையும் கூட. இந் நடவடிக்கை காரணமாக ஒரு சுமுக நிலையும் கூட உருவாகி இருந்தது.

ஆனால், இத்தகைய முன்னேற்றங்களை எல்லாம் கேள்விக்குள்ளாக்கும் வகையில் தற்பொழுது தமிழ்- முஸ்லிம் மக்கள் உறவில் பாதிப்புக்களை விளைவிக்கும் வகையில் நெருக்கடிகள் உருவாக்கப்பட்டு வருகின்றன. தமிழ் இளைஞர் ஒருவரைக் கொன்று பள்ளிவாசல் வளவிற்குள் புதைத்தல் என்பது தணியாத வகையில் மோதல் இடம்பெறுதல் வேண்டும் என்பதை நோக்கமாகக் கொண்டதே. அவ்வாறு இல்லாதுவிடில் படுகொலை செய்திருப்பினும் அச்சடலத்தை வேறு இடத்தில் போட்டிருக்கலாம் அன்றிப் புதைத்திருக்கலாம்.

தற்போதைய வன்முறைகளின் தொடக்கத்திற்கு அக்கரைப்பற்று மசூதியில் தொழுகையின்போது கிரனெட் தாக்குதல் ஒன்று நடத்தப்பட்டதும் அதில் ஐந்து முஸ்லிம் மக்கள் கொல்லப்பட்டதோடு, பலர் காயத்திற்கு உள்ளாகியமையும் காரணமாகக் கூறப்படுகிறது. இத்தாக்குதல் சம்பவத்திற்கு விடுதலைப்புலிகளே காரணம் என்பது முஸ்லிம்களின் ஒரு தரப்பினரின் குற்றச்சாட்டு.ஏனெனில்அம்பாறை மாவட்டத்தில் விடுதலைப்புலிப்போராளிகள் இருவர் கொல்லப்பட்டதற்குப் பழிவாங்கும் நடவடிக்கையே இது என்பது அவர்கள் விளக்கம்.

ஆனால் இது உண்மைக்கு முற்றிலும் மாறானது. ஏனெனில் விடுதலைப்புலிப்போராளிகள் முஸ்லிம் மக்களின் பிரதேசங்களில் கொல்லப்பட்டமை இது முதற்சம்பவம் இல்லை. யுத்தநிறுத்த உடன்பாடு கைச்சாத்தாகிய பின்னர் கூடப் பல இடங்களில் விடுதலைப் புலிப்போராளிகள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். ஆனால் விடுதலைப்புலிகள் முஸ்லிம் மீது தாக்குதல் நடத்தவோ, முஸ்லிம் மக்களுடனான உறவைச் சிதறடிக்கும் வகையில் நடவடிக்கையை மேற்கொள்ளவோ இல்லை.

இந்த நிலையில் விடுதலைப்புலிகள் பள்ளிவாசல் மீது கைக்குண்டு வீசினார்கள், மீன்பிடிக்கச் சென்ற அப்பாவி இளைஞர்களைச் சுட்டுக்கொன்றார்கள் என்பதெல்லாம் உண்மைக்கு மாறான, அடிப்படையில் சதி நோக்கம் கொண்ட செயற்பாடுகள் ஆகும்.அதாவது முஸ்லிம்- தமிழ்மக்கள் இடையிலான உறவில் ஏற்பட்டுவரும் முன்னேற்றம் கண்டு சீற்றம் அடைந்துள்ள சிறிலங்கா பேரினவாத மற்றும் சிங்கள ஆட்சியாளர்களும் முஸ்லிம்- தமிழ்மக்கள் இடையிலான மோதல்கள் மூலம் அரசியல் ஆதாயம் தேட முனையும் முஸ்லிம் அரசியல் வாதிகளில் ஒரு தரப்பினரின் நடவடிக்கையே ஆகும்.

ஆகையினால் முஸ்லிம் மக்களுக்குக் கூறவேண்டிய சில விடயங்கள் உள்ளன. ஒன்று! தமிழ்-முஸ்லிம் உறவை சிங்கள ஆட்சியாளர்களும் அவர்களிடம் நன்மை பெறும் முஸ்லிம் தலைவர்களும் விரும்பவில்லை என்பது முதன்மையானது. அடுத்தாக தாக்குதல் ஒன்று இடம்பெற்றால் இது யாரால் மேற்கொள்ளப்பட்டிருக்கும் என்பதை ஆராய்ந்து அறிந்து கொள்ளமுற்படவேண்டும்.அவ்வாறு இல்லாதுவிட்டால் சிங்கள ஆட்சியாளர்களும் முஸ்லிம் அரசியல்வாதிகளில் ஒரு தரப்பினரும் மக்களை மோதவிட்டு இலாபம் ஈட்டிக்கொள்வார்கள்.

# யுத்தநிறுத்தம், அமைதி முயற்சிகள் மகிந்தவின் நிலைப்பாடு என்ன?

## ஐக்கிய தேசியக்கட்சி கேள்வி

(கொழும்பு)

யுத்தநிறுத்த ஒப்பந்தம் மற்றும் அமைதி முயற்சிகளில் சிறிலங்கா சனாதிபதி மகிந்தராஜபக்ஷவினது நிலைப்பாடுகள் என்ன என்பதை தெளிவாகத் தெரிவிக்க வேண்டும் என்று ஐக்கிய தேசியக்கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஐ.தே.க.வின் பாராளுமன்ற உறுப்பினர்கள் கூட்டத்தில் ரணில் விக்கிரமசிங்க பேசியதாவது;

யுத்தநிறுத்த ஒப்பந்தம் மற்றும் இனப்பிரச்சினையில் சனாதிபதி மகிந்தராஜபக்ஷ வெளியிடும் அறிக்கைகள் குழப்பமானதாகவும், பிரச்சினைக்குரியதாகவும் உள்ளன.

ஒற்றையாட்சிக் கோட்பாட்டை மகிந்த ராஜபக்ஷ வலியுறுத்தினாலும் இந்தியப் பயணம் மேற்கொண்ட வெளிவிவகார அமைச்சர் இந்தியத் தலைவர்களுடன் வெளியிட்ட கூட்டறிக்கையில் ஐக்கிய இலங்கைக்குள் தீர்வு காண்பது தொடர்பாகவே வலியுறுத்தியுள்ளார்.

ஐக்கிய இலங்கைக்குள் கூட்டாட்சி அடிப்படையில் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணவேண்டும் என்பதில் இந்தியா உள்ளிட்ட சர்வதேச சமூகம் தெளிவான நிலைப்பாட்டைக் கொண்டுள்ளது. இது விடயத்தில் எதுவித தாமதமும் குழப்பமும் இல்லாமல் மகிந்தராஜபக்ஷ தனது நிலைப்பாட்டை வெளியிட வேண்டிய அவசிய தேவை உள்ளது.

கட்சியின் மறுசீரமைப்பு தொடர்பாக செயற்குழுக்கூட்டத்திலும் பாராளுமன்றக் கூட்டத்திலும் விவாதிக்கப்பட்ட பின்னரே இறுதி முடிவுகள் மேற்கொள்ளப்படும் என்றார் ரணில்விக்கிரமசிங்க.

ஐ.தே.க.வின் பாராளுமன்ற உறுப்பினர்கள் கூட்டத்தில் கட்சித்தலைவர் மற்றும் பாராளுமன்ற எதிர்க் கட்சித்தலைவர் பொறுப்புக்களிலிருந்து ரணில் விக்கிரமசிங்க விலக வேண்டும் என்று சிலர் குரல் எழுப்பியதாக அக்கட்சி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

## மகிந்தவுடன் ஜே.வி.பி குழு சந்திப்பு

(கொழும்பு)

சிறிலங்கா சனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுடன் ஜே.வி.பி குழுவினர் நேற்று முன்தினம் சந்தித்துப் பேசினர். அலரிமாளிகையில் காலை 8.00 மணிக்குத் தொடங்கிய இந்தச் சந்திப்பு மூன்று மணி நேரங்களுக்கு மேலாக நீடித்தது.

வடபகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மீதான தாக்குதல்கள் அமைதி முயற்சிகளில் மகிந்தவுக்கும், ஜே.வி.பிக்கும் இடையே ஏற்பட்டுவரும் முறுகல் நிலையின் தொடக்கம் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் இந்த மூன்று மணிநேர சந்திப்பில் விவாதிக்கப்பட்டுள்ளன.

அமைச்சர்கள் மைத்திரிபால சிறிசேன, மங்களசமரவீர, ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே, சிறிபதி சூரியாராச்சி மற்றும் முன்னாள் பிரதி அமைச்சர் டளஸ் அழகப்பெருமா ஆகியோர் சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் சார்பில் மகிந்தவுடன் இந்தப் பேச்சுக்களில் பங்கேற்றனர்.

சோமவன்சஅமரசிங்க, ரில்வின் சில்வா, விமல்வீரவன்ச, அநுரகுமார திசநாயக்க ஆகியோர் ஜே.வி.பி சார்பில் கலந்து கொண்டனர்.

# கதிர்காமர் கொலைச் சந்தேகநபரின் இரு நண்பர்களுக்கு விளக்கமறியல்

(கொழும்பு)

கதிர்காமர் கொல்லப்பட்ட வழக்கில் சந்தேக நபரின் வர்த்தக நண்பர்கள் எனக் கூறப்படும் இருவருக்கு எதிர்வரும் 14ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தர விட்டுள்ளது.

கதிர்காமர் வழக்கின் சந்தேக நபர்கள், வர்த்தகரான திருச்செல்வத்திடம் கொலைக்குப் பயன்படுத்திய செல்லிடப் பேசியின் சிம் அட்டையை வாங்கியதாகவும், அதை சிவராசன், சிவறஞ்சன் என்ற நபர் சந்தேக நபர்களுக்குக் கொடுத்ததாகவும் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

கொழும்பு குற்றப் பிரிவினரால் கைது செய்யப்பட்ட சிவராசன் சிவறஞ்சன் மற்றும் திருச்செல்வம் ஆகியோர் கொழும்பு நீதிபதி குசலாசரோஜினி வீரவர்த்தனவிடம் நேற்றுமுன்தினம் முன்னிலைப்படுத்தப்பட்டனர்.

இருவரது சார்பில் முன்னிலையான சட்டத்தரணிகள், விளக்கமறியலைக் கோரும் கொழும்பு குற்றப்பிரிவினரது கோரிக்கையை நிராகரிக்க வேண்டும் என்று வலியுறுத்தினார். கொழும்பு குற்றப்பிரிவினர் தரப்பில் மேலதிக விசாரணைகள் நடத்தப்படவேண்டியுள்ளது என்று தெரிவித்தனர்.

இதையடுத்து எதிர்வரும் 14ஆம் திகதி வரை இருவரையும் நீதிமன்ற விளக்கமறியலில் வைக்க கொழும்பு நீதிமன்றம் உத்தரவிட்டது.

# காலநிலை மாற்றம் காரணமாக மீன் இனங்களுக்கு அச்சுறுத்தல்!

## உலக வன ஜீவிகள் நிதியம் அறிவிப்பு

(கொழும்பு)

காலநிலை மாற்றம் காரணமாக மீன்வகைகள் அச்சுறுத்தலுக்கு உள்ளாகி இருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது. ஆறுகள், குளங்கள் மற்றும் கடல்களில் வெப்பம் அதிகரித்ததன் காரணமாக மீன் வகைகளின் உயிர்களுக்கு ஆபத்து ஏற்பட்டுள்ளதாக உலகவன ஜீவிகள் நிதியம் தெரிவித்துள்ளது. நீரில் வெப்பம் அதிகரிக்கும் பொழுது பிராண வாயு குறைவதனால் மீன் இனங்களுக்கு பாதிப்பு ஏற்படுவதாக உலக வனஜீவிகள் நிதியம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் மூலம் மீன் இனங்களுக்கு நோய்த்தாக்கம் ஏற்படுவதாகவும், சில வேளைகளில் நீரில் வெப்ப அதிகரிப்பால் மனிதர்களுக்கு தாக்கங்கள் ஏற்படக்கூடிய வாய்ப்பு இருப்பதாகவும் அந்த நிதியம் தெரிவித்துள்ளது.

எனவே மீன் இனங்களைப் பாதுகாக்க உலக நாடுகள் முன்வர வேண்டும் என உலக வனஜீவிகள் நிதியத்தின் கடல்வளத்திட்ட அதிகாரி வேண்டுகோள் விடுத்துள்ளார். மீன் இனங்கள் பெறுமதி மிக்க உயிர் கூற்றுகளாக விளங்குவதுடன் போசாக்கு மிக்க உணவு வகைகளாகவும், வருமானத்தை ஈட்டித் தருவதாகவும் விளங்குவதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## சட்ட உதவி நிலையம் திறப்பு

திருகோணமலை மாவட்டத்தில் நேற்று புதன்கிழமை சட்ட உதவி நிலையம் திறந்து வைக்கப்பட்டுள்ளது. காலை ஒன்பது மணியளவில் மேற்படி சட்ட உதவிகள் நிலையம் மேல் நீதிமன்ற நீதியரசர் புஞ்சி ஹேவாவினால் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வுகளில் சட்டத்துறை சம்பந்தப்பட்டவர்கள், சட்டத்தரணிகள், திருகோணமலை மாவட்ட நீதிபதி ஏ. பாலசிங்கம் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

## வயோதிபரின் சடலம் மீட்பு!

(மட்டக்களப்பு)

களுவன்கேணி தோணாவில் பகுதியில் வயோதிபர் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது. களுவன்கேணி - 1 பகுதியைச் சேர்ந்த தாந்தி மூத்தம்பி (வயது - 55) என்ற நபரின் சடலமே கடந்த திங்கட்கிழமை இரவு ஒன்பது மணியளவில் கண்டெடுக்கப்பட்டுள்ளது. ஏறாவூர் பொலிசாரும், படையினரும் சம்பவ இடத்திற்குச் சென்று சடலத்தை மீட்டு ஏறாவூர் வைத்தியசாலையில் ஒப்படைத்தனர்.

மேற்படி நபர் மாங்காட்டில் தமது மகளின் திருமண வைபவத்தில் கலந்து கொண்டு வீடு திரும்பியதாகத் தெரிவிக்கப்படுகிறது. இறந்தவருக்கும் அவரது சகோதரனுக்கும் பிணக்குக் காரணமாக தாக்கல் செய்யப்பட்ட நீதிமன்ற வழக்கு விசாரணை செவ்வாய்க்கிழமை நடைபெறவிருந்ததாகத் தெரியவருகின்றது.

# மங்களசமரவீரவின் செயற்பாடுகளை முடக்க மகிந்த ராஜபக்ஷ தீவிர நடவடிக்கை!

## –சனாதிபதியின் நடவடிக்கை குறித்து ஜே.வி.பி அதிருப்தி

(கொழும்பு)

சிறிலங்கா அரசாங்கத்தின் அனைத்து நிறுவனங்களின் தலைவர்கள் நியமனங்களைப் புதிய அமைச்சர்கள் நியமித்ததைப் மகிந்த ராஜ பக்ஷ நேற்று முன்தினம் இடைநிறுத்தம் செய்து அறிக்கை விடுத்துள்ளார்.

சிறிலங்கா துறைமுக சபையின் தலைவராக திலீப் விஜசுந்தரவை வெளிவிவகாரம் மற்றும் துறைமுக அமைச்சர் மங்களசமரவீர நியமித்திருந்தார். இதுகடும் சர்ச்சையை ஏற்படுத்தியிருந்தது. மங்கள சமரவீரவினால்நீக்கப்பட்ட துறைமுக சபைத் தலைவரை மீண்டும் நியமிக்க வேண்டும் என்று துறைமுக ஊழியர்கள் வலியுறுத்தி வந்தால் துறைமுகப் பணிகள் பாதிப்படையக் கூடிய சூழ்நிலை ஏற்பட்டிருந்தது.

இந்த நிலையில் மங்கள சமரவீர நியமித்திருந்த துறைமுக சபை உத்தரவு உள்ளிட்ட அனைத்து அரசாங்க நிறுவனத்தலைவர்களின் நியமனத்தை இடைநிறுத்தம் செய்திருப்பதாக மகிந்தராஜபக்ஷ அறிவித்துள்ளார். இது தொடர்பாக அனைத்து அமைச்சுகளுக்கும் மகிந்தவின் செயலாளர் லலித் வீரதுங்க நேற்றுமுன்தினம் சுற்றறிக்கையை அனுப்பிவைத்தார்.

சனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் ஆலோசனையில்லாமல் எதுவித நியமனங்களும் மேற்கொள்ளப்படக் கூடாது என்றும் மகிந்தவின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மங்கள சமரவீரவின் நியமனத்தை இரத்துச் செய்யும் வகையில் மகிந்த ராஜபக்ஷ மேற்கொண்டநடவடிக்கையானது மங்கள சமரவீர மற்றும் ஜே.வி.பியினரை அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளதாகத் தெரிகிறது.

புதிய அரசாங்க நியமனத்தின் போது மங்கள சமரவீரவுக்குப் பாதுகாப்பு அமைச்சு ஒப்படைக்க வேண்டும் என்று ஜே.வி.பி வலியுறுத்தியதால் அமைச்சரவை நியமனம் சிலநாள்கள் தாமதமடைந்தது. பின்னர் வெளிவிவகார அமைச்சுப் பொறுப்பை மங்கள சமரவீரவுக்கு மகிந்த ராஜபக்ஷ கையளித்தார்.

இந்தநிலையில் மங்களசமரவீரவின் செயற்பாடுகளைத் தடுக்கும் வகையில் மகிந்தராஜபக்ஷ செயற்பட்டு வருவதாகவும் ஜே.வி.பியினர் அதிருப்தியடைந்திருப்பதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

### மாணவர்கள்...

தோற்றும் மாணவிகள் அனுமதியட்டையெடுக்க வந்த போதிலும் இத்துப்பாக்கிப் பிரயோகம் காரணமாக அனுமதி அட்டைகள் பெறாத நிலையிலேயே திரும்பிச்சென்றார்கள்

கந்தர்மடம் மற்றும் பிறவுண் றோட் சந்தியில் நின்ற இராணுவத்தினர் மாணவர்கள் கைவிட்டுச்சென்ற ஈருருளிகளை அடித்து உடைத்தார்கள். இதன் காரணமாக பெரும் பதற்றமான நிலைமை அப்பகுதியில் காணப்பட்டது. இராணுவத்தினரின் இத்தகைய செயல்களுக்கு எதிராக மேலும் மாணவர்கள் கிளர்ந்தெழுந்துள்ளார்கள். (41)

### யு.என்.டி.பி க்கு தொடர்பில்லை

"மாசாரில் புதிதாக அமைக்கப்பட்ட பாலம் கடும் மழையால் சேதம்" என்றதலைப்பில் கடந்த ஐந்தாம்திகதி ஈழநாதம் நாளேட்டின் நான்காம் பக்கத்தில் வெளிவந்த செய்தி தொடர்பாக, அந்தப்பாலம் அமைப்பதற்கு நிதி வழங்குபவராகவோ ஆலோசகராகவோ அல்லது அத்திட்டத்தைத் தெரிவு செய்தவர்களாகவோ தாம் இருக்க வில்லை என யு.என்.டி. பி. அறியத்தந்துள்ளது.

### அனுசரணைப்..

சிறிலங்கா தூதுவர்களையும் மகிந்தராஜபக்ஷ நேற்று சந்தித்துப் பேசினார்.

அமைதி முயற்சிகளைத் தொடருவதற்காக தாம் மேற்கொண்டுவரும் செயற்பாடுகளை இணைத்தலைமை நாடுகளினது தூதுவர்களிடம் மகிந்த ராஜபக்ஷ விளக்கினார் என்று அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

### வவுனியாவில்..

ஜெறால்ட் நீலமேகம் (வயது:-25) இராணுவச்சிப்பாயான பிரசன்னா ஜயதிலக்க (வயது-22) ஆகியோர் வவு னியா வைத்தியசாலையில் அனு மதிக்கப்பட்டுள்ளனர்.வவுனியா மாவட்ட நீதவான் மாணிக்கவாசகர் இளஞ்செழியன் சம்பவ இடத்திற்கு சென்று பார்வையிட்ட பின்னர் விசாரணைகளை மேற்கொள்ளுமாறு பொலிசாருக்கு உத்தரவிட்டுள்ளார். (10)

### யாழ்.இல்..

புக்களும் இதற்கு எதிரான நடவடிக்கைகளில் ஈடுபடவுள்ளார்கள்.

குறிப்பாக ஆசிரியர்கள் முன்னிலையில் மாணவர்கள்மீது கண்ணீர் புகைக்குண்டுகள் ஏவப்பட்டமை பலத்த சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளதுடன் சிறுவர் உரிமை அமைப்புக்கள் பற்றியும் விமர்சனங்கள் எழுந்துள்ளன. பாடசாலை மாணவர்கள் கற்றலுக்கான வாய்ப்பை ஏற்படுத்தித் தரும்படி வேண்டுகின்ற போதிலும் அதற்கு கூட செவிமடுக்க மறுக்கும் இராணுவத்தினரின் நடவடிக்கையை கண்டிக்காத சிறுவர் அமைப்புக்கள் பற்றி பெற்றோர்கள் விசனம் தெரிவிக்கின்றார்கள். (41,கீ,33,கா)

### அனுசரணையாளர்..

புதிய சனாதிபதி மகிந்தராஜபக்ஷ இலங்கை இனப்பிரச்சினையில் அனுசரணையாளராக மீண்டும் நோர்வே தனது பணிகளைத் தொடரவேண்டும் எனஅழைப்பு விடுத்ததை அடுத்து இலங்கைக்கான நோர்வேயின் சிறப்பு அமைதித் தூதுவரும் அமைச்சருமான எரிக் சூல்ஹெய்மிடம் மீண்டும் அமைதிப் பணிகளைத் தொடங்க ஏதேனும் பிரச்சினைகள் இருக்கின்றதா என பி.பி.ஸிஇன் சிங்கள சேவையான சந்தேசிய கேட்ட போதே அவர் இவ்வாறு கூறினார்.

இதேவேளை மீண்டும் அமைதிப் பேச்சுவார்த்தைகள் தொடங்குதற்கு முன்னராக தற்போதுள்ள போர் நிறுத்தப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தை மறு ஆய்வு செய்யப்படவேண்டும் என்பது குறித்து ஒரு பேச்சுவார்த்தை நடைபெற்றால் அதில் நோர்வேயின் பங்கு என்னவாக இருக்கும் எனக் கேட்டபோது

மறுபடியும் இது சம்பந்தப்பட்ட விடயங்களை சம்பந்தப்பட்ட இரு தரப்பினரும் தான் பேசி அதற்கான முடிவிற்கு வரவேண்டும் அமைதி வழிமுறையின் எதிர்காலம் குறித்தும் அவர்கள் விவாதித்து முடிவெடுக்க வேண்டும்.

இதில் முக்கியமானது என்னவெனில் சம்பந்தப்பட்ட இரு தரப்பினரும் தான் முக்கியமான உந்துசக்திகளாக இருக்க வேண்டும் அமைதி நோக்கி அவர்கள் செல்ல விரும்பினால் நோர்வே அதற்கு உதவி செய்யும். எனவே நாங்கள் இறுதி முடிவெடுப்பதற்கு முன் சம்பந்தப்பட்ட விவகாரங்கள் குறித்து இரு தரப்பினரும் விவாதிக்க வேண்டும் என்றார் அவர்.

### இராணுவ ஆக்கிரமிப்பை...

தீவிரப்படுத்தப் போவதாக ஹாட்லிக் கல்லூரி மாணவர்கள் படைத்தரப்பிற்கு எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

நேற்றுக்காலை ஹாட்லிக் கல்லூரி மாணவர்களுடன் இணைந்து ஏனைய வடமராட்சி பாடசாலை மாணவர்கள் ஹாட்லிக் கல்லூரி முன் இராணுவத்தினரை வெளியேறக்கோரி ஆர்ப்பாட்டத்திலீடுபட்டிருந்தபோது 11.00 மணி தொடக்கம் 12.00 மணிவரை இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு பிரதிநிதிகள் மூவர் மாணவர்களுடன் சமரசப் பேச்சில் ஈடுபட்டனர்.

கண்காணிப்புக்குழுப் பிரதிநிதிகள் சுமார் ஒரு மணித்தியாலங்கள் பாடசாலை முன்னரங்க நிலையில் பேச்சில் ஈடுபட்டு மாணவர்கள் தரப்பில் பங்கு கொண்ட மாணவ தலைவர்கள் பாடசாலைச் சூழலில் உள்ள காவலரண்களை அகற்றி உடனடியாக இராணுவத்தினர் வெளியேற்றப்படவேண்டும் எனவும், இராணுவத்தினர் எமது பாடசாலைச் சூழலில் காவலரண்கள் மற்றும் மண் அணைகள் அமைத்து தமது இயல்பான கல்வி கற்றலுக்கு அச்சுறுத்தலாக அமைந்திருப்பதைப் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு பிரதிநிதிகளுக்கு சுட்டிக்காட்டியதனைத் தொடர்ந்து வடமராட்சி 524 ஆவது படைப்பிரிவு பொறுப்பதிகாரியுடன் மாணவ பிரதிநிதிகள் ஐவரையும், ஊடகவியலாளர்கள் இருவரையும் பேச்சில் கலந்து கொள்ள கண்காணிப்புகுழு ஏற்பாடு செய்திருந்தது.

ஆனபோதும் 524 ஆவது படைஅதிகாரி ஊடகவியலாளர்களை அனுமதிக்க மறுத்ததுடன் மாணவ பிரதிநிதிகள் இருவரை மட்டும் பேச்சுக்கு அனுமதித்தனர். இதனால் கண்காணிப்புக்குழு முன்றலில் மாணவ பிரதிநிதிகள் இருவரும் 524 ஆவது படைப்பிரிவு பொறுப்பதிகாரி ஆகியோர் சமரசப் பேச்சில் ஈடுபட்டனர். சுமார் 45 நிமிடங்கள் இடம்பெற்ற இப்பேச்சு எதுவித பயனுமின்றி முடிவடைந்தது.

பேச்சின் முடிவில் பேச்சில் கலந்து கொண்ட மாணவத் தலைவர்கள் 524 ஆவது படைப் பிரிவு பொறுப்பதிகாரிக்கு எமது வேண்டுகோள்கள் நிறைவேற்றப்படாதுவிடின் இதற்கான சரியான பதிலை இன்று காலை 6.00 மணிக்கு முன் தெரியப்படுத்தாதுவிடின் மாணவர்களது போராட்டம் தொடரும் அத்துடன் உங்களது (படைஅதிகாரியினது)கொடும்பாவி பிரேதப்பெட்டியில் மாணவர்களால் ஊர்வலமாக எடுத்துவரப்பட்டு பாடசாலை முன் எரிக்கப்படுமெனவும் தெரிவித்துவிட்டு வெளியேறியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (கா)

# தலைக்கவசமணிந்த இளைஞர்கள் கைது!

பருத்தித்துறை மந்திகைப் பகுதியில் தலைக்கவசமணிந்து உந்துருளியில் பயணித்த நான்கு இளைஞர்கள் சிறிலங்கா இராணுவத்தினரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு நேற்றுக்காலை 6.30 மணியளவில் மந்திகைப் பகுதியூடாக நான்கு உந்துருளிகளில் தனித்தனியே தலைக்கவசமணிந்து பயணித்துக் கொண்டிருந்த நான்கு இளைஞர்கள் மந்திகையில் உள்ள சிறிலங்காப் படையினரின் ஒட்டுப்படையான ஈ.பி.டி.பி தேசவிரோதிகளின் முகாம் முன் காவலில் நின்றிருந்த இராணுவத்தினரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

உந்துருளிகளில் பயணிப்போர் கட்டாயமாக தலைக்கவசம் அணிய வேண்டுமென்பது சிறிலங்காப் பொலிசாரின் அறிவுறுத்தல்.இவ்வாறிருக்க இராணுவத்தினரின் நடவடிக்கை தொடர்பாக மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். (கா)

# மகிந்தவின் சிந்தனைகளுக்குட்பட்ட சமாதான நடவடிக்கைகளுக்கு ஆதரவு

## -ஜே.வி.பி யின் புதிய நிலைப்பாடு

மகிந்த சிந்தனைகள் என்ற வேலைத்திட்டத்தை உள்வாங்கிக் கொண்டு அந்த வேலைத்திட்டத்திற்கு ஏற்ப சமாதான நடவடிக்கைகளை எடுப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றது. அதற்கு எங்களுடைய பரிபூரணமான ஆதரவை வழங்கத் தீர்மானித்துள்ளோமென மக்கள் விடுதலை முன்னணியின் (ஜே.வி.பி.) பாராளுமன்ற உறுப்பினர் சந்திரசேகரன் கூறினார்.

சமாதான நடவடிக்கையில் நோர்வேயை அனுசரணையாளராகத் தொடர்ந்தும் இருக்குமாறு சனாதிபதி மகிந்த ராஜபக்ஷ வேண்டுகோள் விடுத்ததை அடுத்து ஜே.வி.பி யின் நிலைப்பாடு என்ன என பி.பி.சி இன் தமிழோசை ஜே.வி.பியின் பாராளுமன்ற உறுப்பினர் சந்திரசேகரனிடம் கேட்டபோதே அவர் இவ்வாறு கூறினார்.

தேர்தலுக்கு முன்பு நோர்வேயின் பங்கு கேள்விக்குறியாகவுள்ளது. பல்வேறு விமர்சனங்களுக்கு உள்ளாகி இருக்கின்றது. அவர்கள் மீண்டும் அனுசரணையாளராக இருப்பது மறுபரிசீலனை செய் யப்பட வேண்டும் எனக்கூறி இருந் தீர்கள். தேர்தலுக்குப்பின்னர் வேறு மாதிரியான நிலைப்பாட்டை எடுத்துள்ளீகளே என கேட்டபோதே அவர் இவ்வாறு கூறினார்.

### காணி அனுமதிப்பத்திரம் இன்று வழங்க ஏற்பாடு

கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச செயலக காணிஅலுவலகத்தினால் நடமாடும் சேவைகள் மூலம் இன்று செல்வாநகர் கிராமமக்களுக்கான காணி அனுமதிப்பத்திரம் வழங்கும் நடவடிக்கைகளுடன் காணிஅனுமதிப்பத்திரத்திற்கு கையொப்பம் வாங்கும் நடவடிக்கையும் மேற்கொள்ளப் பெறவுள்ளது.இன்று காலை 9.00 மணி முதல் பிற்பகல் 4.00 மணிவரை செல்வாநகர் கிராம அபிவிருத்திச்சங்கமண்டபத்தில் மேற்படி நடவடிக்கைகள் இடம் பெறவுள்ளதென கிளிநொச்சி பிரதேச செயலககாணி உத்தியோகத்தர் செ.ஸ்ரீரெங்கநாதன் தெரிவித்துள்ளார். (சோ)

### இராணுவ..

அமைதியாக ஆர்ப்பாட்டம் நடத்தி வரும் மாணவர்கள் மீது இராணுவம் கண்மூடித்தனமான தாக்குதலை மேற்கொண்டு வருகிறது. இந்தச் சம்பவங்களைத் தடுக்க எவரும் முன்வராத நிலையில் மாணவர்களாகிய நாங்கள் மாணவர் மீதான தாக்குதலுக்கு எமது வன்மையான கண்டனத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம். என யாழ். மாவட்ட தமிழ் மாணவர் ஒன்றியம் நேற்று தெரிவித்துள்ளது. இன்றைய தினம் (புதன்கிழமை) அரசடி வீதி பிறவுண் வீதிச் சந்திப்பகுதியிலும் கே.கே.எஸ் வீதி யாழ். இந்துக் கல்லூரிக்கு அருகிலும், ஹாட்லிக் கல்லூரிக்கு அருகிலும், அமைதியாக ஆர்ப்பாட்டம் நடத்திய மாணவர்கள் மீது இராணுவத்தினர் கண்மூடித்தன மான துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்ததோடு கடுமையான தடியடிப் பிரயோகத்திலும், ஈடுபட்டனர். இதனால் மாணவர்கள் காயம் அடைந்ததோடு வீதி வழியே வந்த பொதுமக்களும் நையப் புடைக்கப்பட்டனர்.

இராணுவ ஆக்கிரமிப்பாளர்களிடம் இருந்து தங்களது அடிப்படை உரிமைகளைப் பெற்றுக் கொள்ளும் நோக்கத்தோடு பகிஷ்கரிப்பிலும் அமைதி ஆர்ப்பாட்டங்களிலும் ஈடுபட்டு வருகின்ற இந்த வேளையில் இவ்வாறான அடக்குமுறைகளை மேற்கொண்டு மாணவர்களைச் சீண்டினால் பாரதூரமான விளைவுகளைச் சந்திக்க நேருமென எச்சரிக்கின்றோம்.

மாணவர்கள் மீதான தாக்குதல்கள் தொடர்கின்ற வேளைகளிலும், பலமுறை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினருக்கு அறிவித்த போதிலும் அவர்கள் தங்களுடைய பிரசன்னத்தைத் தவிர்த்துக் கொண்டனர்.

மாணவர்களுடைய கோரிக்கை நிறைவேறும் வரையும் மாணவர்களுடைய போராட்டம் தொடரவுள்ள நிலையிலும், அனைத்துக் கல்விச் சமூகத்தினதும் பூரண ஒத்துழைப்பையும் நாடி நிற்கின்றோம்.

எத்தகைய தடைகள் வந்தாலும், எமது போராட்டத்திலோ எமது கோசத்திலோ பின் வாங்காது போராடுவோமென ஒட்டு மொத்த தமிழ் மாணவர்கள் சார்பாகவும், வலியுறுத்தி வருகின்றோம் என வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (37)

### படைச்சிப்பாய்..

தேசிய வைத்தியசாலையின் பொலிஸ் பிரிவினர் தெரிவித்தனர். இதன்மூலம் குண்டுத்தாக்குதலில் கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கை எட்டாக உயர்ந்துள்ளது.


## கண்ணீர் அஞ்சலி

### கிருஷ்ணபிள்ளை துரைராஜா

(இளைப்பாறிய பொறியியலாளரும், நிர்மாண உத்தரவாத நிதியத்தின் யாழ். கிளை முகாமையாளரும்)

**பண்பினிலே பஞ்சின் மென்மை**
**பார்வையினிலே தேவகருணை**
**நெஞ்சினிலே நிறைந்த உறவே**
**நீங்குவீரோ எம் நெஞ்சைவிட்டு**



பி.ப. கெல்மன்
உரிமையாளர்,
கெல்மன் பொறியியல் நிறுவனம்,
கிளிநொச்சி.

(சி-13489)


இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 08 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.